# விருட்சம்

## 15வது ஆண்டுவிழா

## சிறப்புமலர் 2007

அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம்

ஒஸ்லோ – நோர்வே

Annai Poopathi Tamilsk Kultursenter

அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம்

றொம்மன் வளாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே

வாழிய பூபதி தமிழ்க் கலைக்கூடம்
வையகம் போற்றிட வளர்மதி எனவே (வாழிய)

ஈழத்தின் வெளியே இலங்கிடும் கலையகம்
இளையவர் நாமும் ஏற்றிடும் அறிவகம்
அன்பும் அறனும் பண்பும் பயில்வோம் - நாளும்
நாம் தமிழரென மார்தட்டிச் சொல்வோம் (வாழிய)

புல்நுனி மீது வெண்பனி போர்த்தும்
நடுநிசிச் சூரியன் நாணிச் சிவக்கும்
நேரிய நோர்வே நன்நிலந்தன்னில் - எம்
முத்தமிழ் கலைக்கூடம் முகிழ்த்தது வாழி (வாழிய)

பாலகர் வதனம் பரவசம் காட்டும்
பாருக்குள் எம் இனம் பார் என்றழைக்கும்
தாய்மொழி தமிழ்மொழி தழைக்கும் - இங்கு
தளிர்விட்ட கலைகள் சாதனை செய்யும் (வாழிய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்

16வது ஆண்டுமலர்

**மலர்க்குழு**

திரு. கா.நிர்மலநாதன்
திரு.சி.சிவதாஸ்
திரு.இ.குணதாசன்
திரு.ச.ஆனந்தகரன்
திருமதி.நி.கலைச்செல்வி
திரு.சி.உமைபாலன்
திரு.சி.ரூபன்

**அட்டை, இதழ் வடிவமைப்பு:**

ஓவியவாரிதி

திரு.இ.குணதாசன்

பதிப்பகம்:

ஆட்டிஸ்ரிக்

புகைப்படங்கள்:

ஏபிரகாம் விஜயன்

அண்ணைபூபதி தமிழ்க் கலைக்கூடம்
றொம்மன் வளாகம்
ஒஸ்லோ – நோர்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியாகச்சுடர் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை

நான் எனது சுயவிருப்பின் பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும்வரை சாகும்வரை உண்ணவிரதம் இருக்கிறேன். நான் நினைவிழந்து போகும் நிலையிலும் என்னை எனது கணவனோ, பிள்ளைகளோ, உறவினர்களோ காப்பற்றவோ... தூக்கிச்செல்லவோ முடியாது

# விருட்சத்துள் விரவுமுன்

*தமிழ்வாழத் தன் இன்னுயிர் ஈந்த*
*அமிழ்தான எம் அன்னை பூபதி பெயரால்*

*தமிழ் வளர்க்கும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட றொம்மன் வளாகத்தின் 15வது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் வண்ணம் இம்மலர் வெளியிடப்படுகின்றது.*

*நள்ளிரவுக் கதிரவன் துள்ளிவரும் நனிசிறந்த நன்நாடாம் நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோ நகரத்தில், 22 மாணவர்களுடன் ஆரம்பமாகிய இப்பாடசாலை இன்று நாடெங்கும் கிளைபரப்பி மாபெரும் விருட்சமாக வளர்ந்து, தமிழ் பேசும் குழந்தைகளை அள்ளி அரவணைத்து அறிவொடு, மொழி, கலை, இலக்கியம், விளையாட்டென அனைத்தையும் வழங்கிடும் கற்பக தருவாக விளங்குகின்றது. நோர்வே வாழ் தமிழ்ச் சமூகத்தின் நலன்பேண் மையமாகவும் திகழ்கின்றது.*

*எமது பாடசாலையிற் பயின்ற பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகத்தினர், தமிழ் அறிஞர்கள் எனப் பலரினதும் படைப்புக்களைத் தாங்கி வரும் இம்மலரின் ஆக்கத்தில் தங்களது மேலான பங்களிப்பை நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகள் .. ..*

மலர்க்குழு 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வளர்ச்சிப் பழகளில்...

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட தமிழ்க் கலைக்கூடம் எமது அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடமாகும். தமிழ் மொழி, பண்பாடு, இன அடையாளத்தைப் பேணவேண்டிய தொலைநோக்கின் பின்னணியில் காத்திரமான சமூகத்தளம் ஒன்றின் தேவை உணரப்பட்ட புறச்சூழலிலேயே கலைக்கூடம் உதயமானது. 15 ஆண்டுகளுக்கு முன்னர் 22 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு, இன்று 18 வளாகங்களுடனும் 2200 ற்கு மேற்பட்ட மாணவர்களுடனும், 300 ற்கு மேற்பட்ட ஆசிரியர்களுடனும், 100 ற்கு மேற்பட்ட நிர்வாக உறுப்பினர்களையும் கொண்டதொரு பெருவிருட்சமாக வியாபித்துள்ளது. நோர்வேஜிய பெருஞ் சமூக மட்டத்தில் அங்கீகாரமும் மதிப்பும் பெற்ற பெரு நிறுவனமாகவும் திகழ்கின்றது.

நோர்வேயின் பல்வேறு பிரதேசங்களிலும் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். எனவே அனைத்துச் சிறார்களின் நலனும் வளமும் கருதி அவர்களுக்குரிய வாய்ப்புக்களை வழங்குவதற்கு ஏதுவாக அவர்களின் வாழிடங்களிலேயே எமது வளாகங்களை நிறுவி வருகின்றோம். றொம்மன் வளாகத்தில் மட்டும் 900 ற்கு மேற்பட்ட மாணவர்கள் தமிழ், சமயம், சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், வீணை, புல்லாங்குழல், ஓவியம், சுரத்தட்டு (keybord) போன்றவற்றைப் பயில, 75ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். மிகவிரைவில் தபேலா போன்ற வாத்திய வகுப்புக்களும் ஆரம்பிக்கவுள்ளோம்.

தாய் மொழியைக் கற்றுத்தேர்ந்த மாணவர்கள் நோர்வேஜிய பாடசாலைகளில் பாடநெறிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றமையைப் பல ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன. அது மட்டுமல்லாது மேல்நிலைக் கல்வியில் (videregående skole˙) தமிழ் மொழியை மூன்றாம் மொழியாகத் தெரிவு செய்வதன் மூலம் கூடிய சராசரிப்புள்ளிகளை பெறும் வாய்ப்பும் உள்ளது.

தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் கற்பித்தல் தரத்தினை மேம்படுத்தும் வகையிலும் காலத்திற்குக் காலம் ஆசிரியர்கள், நிர்வாகத்தினருக்கான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வருகின்றோம். பாடத்திட்டங்களையும் இலகுவாக்கியுள்ளோம். மாணவர்களினதும் பெற்றோர்களினதும் நலன்கருதி நூலகத்தினை அமைத்துள்ளோம். இந்த நூலகத்தை விரிவாக்கவுள்ளோம். இதில் அனைவரும் உறுப்பினர்களாகி பயன்பெறலாம்.

நோர்வேஜிய பெண்கள் நலன்பேண் அமைப்புகளில் ஒன்றான **"Norske Kvinners Sanitetsforening"** அமைப்பு **"Unni og Jon Dørsjøs minnefond - pris "** எனும் ஞாபகார்த்த நிதிய விருதினை 2003 இல் எமக்கு வழங்கி எமது பணிகளுக்கு மதிப்பளித்திருந்தமையை பெருமையுடன் பதிவு செய்து கொள்கின்றோம்.

தமிழர் வள ஆலோசனை மையத்தின் வளர்ச்சிப் பாதையில் உருவாக்கப்பட்ட ஞாயிறு உதவிப்பாடத்திட்டமானது தமிழ் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டபோதிலும், ஏனைய இன மாணவர்களினது வேண்டுகோளிற்கு இணங்க அவர்களையும் உள்வாங்கினோம். இத்திட்டத்தில் இந்திய, பாகிஸ்தானிய, சோமாலிய, ஈரானிய, வியட்னாமிய, எரித்திரிய, துருக்கிய, நோர்வேஜிய மாணவர்களும் கல்வி பயில்கின்றார்கள். 15 மாணவர்களுடன் உருவான இத்திட்டம் இன்று 150 ற்கும் மேற்பட்ட மாணவர்களுடனும், 30 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களுடனும் காத்திரமான சேவையை வழங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நிலைக் கல்வியில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களும், பல்கலைக் கழகம் மற்றும் உயர் கல்லூரிகளுக்குத் தெரிவாகும் எமது மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் எம்மை இத்திட்டத்தை மேலும் திடமாக முன்னெடுப்பதற்கான உந்துதலைத் தருகின்றது.

நோர்வேஜிய அரச மட்டத்தில் இத்திட்டமானது மிகப்பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இத்திட்டம் மாணவர்களின் உயர்கல்விக்கான திறவுகோல் என்ற அடிப்படையில் 2006ம் ஆண்டு OXLO ambassadørpris எனும் விருது ஒஸ்லோ மாநகர சபையின் இணைவாக்கத்திற்கும் ஒருமைப்பாட்டுக்குமான அலகினால் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. ஒஸ்லோ நகரசபையின் கல்விப்பணிப்பாளர் Tørger Ødegård அவர்களால் இவ்விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திட்டமானது 8ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டபோதிலும், பலரின் வேண்டுகோளிற்கு இணங்க 5,6,7 ஆம் வகுப்பினருக்கும் செவ்வாய்க்கிழமைகளில் நாம் உதவிப்பாடத்திட்டத்தை நடாத்தி வருகின்றோம்.

அத்துடன் நாம் 4ஆம் வகுப்பிற்கு மேற்பட்டவர்களின் ஆங்கில மொழி வளர்ச்சிக்கு எம்மால் இயன்ற வரை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஆங்கில ஆசிரியர்களின் கல்வித் தகமையிலும் கற்பித்தல் ஆளுமையிலும் முக்கிய கவனம் செலுத்தியுள்ளோம்.

மூத்தோர் முற்றமானது ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வீறுநடை போடுகின்றது. யோகாசனம், முற்றத்துப்பந்தல், மருத்துவ ஆலோசனைகள், கலை இலக்கியப் பகிர்வு என்பன குறிப்பிடத்தக்கவை. ஆனபோதும் எமது சமூகத்தின் மூத்தோரின் நலன்களுக்கான முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் இன்னும் நிறையவே உள்ளன.

தாயகத்தில் சுனாமியால் எமது உறவுகள் பாதிக்கப்பட்ட போது எமது நிறுவனமும் எமது வளங்களை ஒருங்கிணைத்து எம்மாலான உதவிகளையும் உறவுகளைப் பறிகொடுத்த இங்குள்ள உறவுகளின் உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளையும் முன்னெடுத்தது. இந்த செயற்திட்டத்திற்காக " Stovner bydel-Bydelspris 2005" எனும் விருதினை எமக்களித்திருந்தமையும் இங்கு பதிவு செய்கின்றோம்.

எமது கல்விப்பணிமேலாளர் திரு.சிவதாஸ் சிவபாலசிங்கம் அவர்களின் சமூகச் செயற்பாடுகளுக்கான அடையாளப்படுத்தலாக ஒஸ்லோ மாநகரசபையின் 2005 ஆம் ஆண்டிற்கான கலாச்சார விருது வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.ஒரு தமிழருக்கு முதற்தடவையாக இவ்விருது வழங்கப்பட்டமை நோர்வேத் தமிழர்களுக்கு பெருமை சேர்த்து நிற்பதோடு, எமது இளம் சந்ததியினரை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருக்கின்றது.

நோர்வேயில் வாழும் எமது இளைய தலைமுறையினரை நோக்கிய பணிகளை முன்னெடுத்து வருகின்ற அதேவேளை, தாயகத்திலுள்ள செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலையில் பராமரிக்கப்படும் சிறார்களுக்கும் எம்மால் இயன்றவரை உதவிக்கரம் நீட்டி வருகின்றோம். கலைக்கூட வளாகங்களில் இயங்கி வரும் சிற்றுண்டிச்சாலை, ஆசிரியர்கள் அன்பளிப்புச் செய்யும் ஊதியம், பெற்றோர்கள் தமது குழந்தைகளின் பிறந்தநாளின் போது உவந்தளிக்கும் அன்பளிப்புக்கள், கலைக்கூடத்தின் சிறு சிறு சேமிப்புக்கள் போன்றவற்றைக் கொண்டு நாம் காந்தரூபன் அறிவுச்சோலைச் சிறார்களுக்கு நிரந்தர வதிவிடத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வாழும் தமிழ்ச் சமூகம் பற்றி நோர்வேஜிய மட்டத்தில் நல்ல முறையில் பேசப்பட்டாலும், சில ஆய்வுகள் எமக்கு மனவருத்தத்தைத் தருகின்றன. எனவே நாம் அதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து எமது இளைய தலைமுறையினர், பெண்கள் மற்றும் பெற்றோர்களை நோக்கிய சமூகத்தின் நலன்கள் சார்ந்த செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இந்த முயற்சிக்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இன்றியமையாததாகும். எமது இளம் சந்ததியினர் இந்த பல்லினப் பெருஞ்சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கான ஆக்கபூர்வமான வழிவகைகளைச் செய்யவேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

தமிழ் இளைஞர் மன்றம் எனும் பிரிவை 2001 இல் அறிமுகம் செய்திருந்தோம். இப்பிரிவானது இங்கு எம்முடன் இணைந்திருக்கும் இளம் சந்ததியினரை நல்ல முறையில் வழிநடத்திச் செல்வதற்கு பக்க பலமாக இருக்கும்.எம்முடன் இணைந்து செயற்பட இளையோர் பலர் முன்வந்த போதிலும், எம்முடைய செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்த மேலும் வளங்கள் தேவைப்படுகின்றன. எமது வளர்ச்சிக்கு எம்மோடு தோள் கொடுக்க எமது இளம் சந்ததியினரை, எம் பழைய மாணவர்களை இரு கரம் நீட்டி வரவேற்கின்றோம்.

நோர்வேத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் காத்திரமான சமூகப்பணி ஆற்றுபவர்கள், இளைய தலைமுறையினரின் மேம்பாட்டுக்காக உழைப்பவர்களை அடையாளப்படுத்தி ஊக்குவிக்கும் முகமாக 2000ம் ஆண்டிலிருந்து "அன்னை பூபதி விருது" வழங்கி மதிப்பளித்து வருகின்றோம். அத்தோடு இளையோருக்கான "அன்னைபூபதி கிண்ணம்" உதைபந்தாட்டப் போட்டியை 2004ம் ஆண்டிலிருந்து ஆரம்பித்துள்ளோம்.

இப்பெரு வளர்ச்சியை நாம் எட்டுவதற்கு கடந்த காலங்களில் உறுதுணையாக நின்ற நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், மற்றும் அனைவரது உதவிக் கரங்களையும் நன்றியோடு பற்றிக்கொள்கின்றோம். அடுத்த கட்ட வளர்ச்சியிலும் உங்களின் மேலான பங்களிப்பு இருக்கும் எனற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

*திரு. காசிநாதன் நிர்மலநாதன்*
*இணைப்பாளர்*
*தமிழர் வள ஆலோசனை மையம்*
*அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்*

## இதுவரை அன்னைபூபதி விருது பெற்றவர்கள்

*திரு.நிரஞ்சன் லோறன்ஸ்*

*முத்தமிழ் அறிவாலயம்*

*திரு. இளையதம்பி குமரேந்திரன்*

*திரு. நாதன் கிறிஸ்தோபர்*

*திரு. நமசிவாயம் கிருஸ்ணசிங்கம்*

*திரு. அகிலன் செபஸ்ரியன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Anerkjennelse for innsatsen i det norske samfunnet

Tamilsk Ressurs- og Veiledningssenter (TRVS) ble utnevnt til to bemerkelsesverdige priser i 2006. Den ene var OXLO ambassadørprisen av Enhet for mangfold og integrering for senterets leksehjelptiltak og den andre var kunstnerprisen til Sivathas Sivabalasingam som har hovedansvaret for den kulturelle virksomheten samt morsmålundervisningen ved senteret. Den sistnevnte prisen ble gitt av Oslo Kommune.

## Leksehjelp – veien til høyere utdanning

OXLO ambassadørprisen var en anerkjennelse for den innsatsen senteret gjør for å gi elever leksehjelp og støtteundervisning i fag som matte, naturfag, fysikk, kjemi og samfunnsfag. Tiltaket styrker elevenes faglige kompetanse og motiverer dem til å satse på høyre utdanning. Elevene får også informasjon og veiledning om utdanningsmuligheter. Hensikten med utnevnelsen var å markere viktigheten av innvandrerorganisasjonenes bidrag i leksehjelpsarbeidet.





*Skolebyråd Tørger Ødegård overrakte OXLO ambassdørprisen til TRVS-koordinator Kasinathan Nirmalanathan den 26.04.2006*

"Deres innsats er et nødvendig supplement til den leksehjelpen som foregår i regi av skolene og ved Oslo Røde Kors. Vår erfaring er at mange av innvandrerorganisasjonene er flinkere til å motivere og følge opp barna. Først og fremst fordi de fleste frivillige hjelperne i disse organisasjonene selv har minoritetsbakgrunn og dermed både fungerer som positive rollemodeller for barna og lettere oppnår foreldrenes tillitt." *[Enhet for mangfold og integrering]*

## Oslo bys kunstnerpris

Oslo bys kunstnerpris for 2005 ble utdelt til Sivathas Sivabalasingam, for hans framragende arbeid innenfor kultur og peosi. Prisen ble delt ut av ordfører Per Ditlev-Simonsen, 1.juni 2006. Arrangementet fant sted i Oslo Rådhus.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivabalasingam har vært leder for Tamilsk Ressurs- og Veiledningssenter i 10 år siden opprettelsen av senteret i 1992. I dag har han hovedansvar for den kulturelle virksomheten og morsmålundervisningen ved senteret. Sivabalasingam har gjort en betydelig frivillig innsats i både opprettelsen og utviklingen av senteret.

I tillegg er han poet og utgir dikt på Tamil. Han har gitt ut to diktsamlinger, den første i 2002 og andre i 2004. I diktene sine tar han blant annet opp temaer som barn og ungdommers situasjon i det flerkulturelle Norge. En god del av diktene og sangtekstene hans handler om hjemlandet, hvor han uttrykker lengselen etter fred og frihet.





*Prisen ble delt ut av ordfører Per Ditlev-Simonsen 1.juni 2006 ved Oslo Rådhus.*

Samfunnsengasjerte kulturarbeidere og kunstnere med minoritetsbakgrunn har mottatt slike priser tidligere, men det er verdt å merke seg at en med tamilsk bakgrunn mottok prisen for første gang.

*Tamilsk Ressurs- og veiledningssenter tilbyr aktiviteter for tamilske barn og unge, kvinner, voksne og eldre. Morsmålsopplæring, leksehjelp, tradisjonell dans og musikkopplæring er hovedaktiviteter ved senteret. I tillegg til disse aktivitetene er det flere tiltak for kompetanseheving blant voksne i form av seminarer og kurs. Det fungerer også som et møtested for sosialt samvær blant eldre norsktamilske mennesker. Senteret ble opprettet med 22 barn og unge i 1992 og har siden da vokst til over 2400 medlemmer fordelt på 18 avdelinger spredt rundt i hele Norge.*

**- Av Rooban Sivarajah**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Gratulerer



**Hilsen til bok: Tamilsk Ressurs- og veiledningssenter**

**Jeg har ved flere anledninger besøkt Tamilsk Ressurs- og veiledningssenter, og fulgt utviklingen frem til i dag.**

**Dere har imponert meg. Dere satser på barna og at barna skal få utvikle sine ressurser, enten det er med fiolinen, på fotballbanen eller med skolefagene. I tillegg er jeg imponert over studieveiledningen dere driver. Det er ikke tilfeldig at tamiler ligger høyt over gjennomsnittet for høyere utdanning og har en høyere yrkesdeltakelse enn majoritetsbefolkningen i Norge.**

**Men, i tillegg til at dere har skjønt at det er barna vi må satse på, så har dere også en fin tilnærming til det å bo og leve i et flerkulturelt bysamfunn. Man blir ikke mer tolerant av å ikke kjenne seg selv og sin bakgrunn. Snarere tvert imot. Det er viktig å forstå sine kulturelle røtter for å unngå usikkerhet og frykt. Derfor setter jeg pris på at dere lærer opp barna i tamilsk kultur. Det er en fordel for tilpasningen til det norske samfunnet.**

**Til sist: Jeg vil aldri glemme den hjertevarmen og det samfunnsansvaret dere viste i etterkant av tsunamien i desember 2004. Dere bidrar til at Oslo er byen med det store hjertet!**

**På vegne av Oslos innbyggere vil jeg takke dere for den innsatsen dere legger ned i denne byen!**

**Erling Lae, byrådsleder**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்...!

**தமிழீழக் கல்விக் கழகம்**
நடுவப்பணியகம்
கிளிநொச்சி

**EDUCATION COUNCIL OF TAMILEELAM**
CENTRAL BUREAU
KILINOCHCHI

..............................200.....

இணைப்பாளர்,
அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம்,
(தமிழர் வள மதியுரை மையம்.)

## வாழ்த்துரை

நோர்வேயின் அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம் தனது பதினைந்தாவது ஆண்டுப் பணி நிறைவையொட்டி, தனது ஆண்டு விழாவை ஒஸ்லோவில் கொண்டாட இருக்கிறது.

ஈழத் தமிழினம் மிகப் பெரிய நெருக்கடிக்குள்ளாகியிருந்த வேளையில்,அந் நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்கோடு அமைதி வழியிற் போராடி உண்ணா நோன்பிருந்து தன்னின்னுயிரை ஈந்த தற்கொடையாளி அன்னை பூபதி அவர்களின் பெயரில்,நோர்வே வாழ் தமிழ் மாணவர்களின் தாய் மொழிக் கல்விக்கு உதவும் நோக்கோடு, அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம் இயங்கிவருகின்றது.

01.02.1992 இல், 22 பிள்ளைகளுடன் தொடங்கிய அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம் 15 ஆண்டுகளில் 2200 இற்கும் கூடுதலான தமிழ்ப் பிள்ளைகளை உள்வாங்கி 18 வளாகங்களில் தனது பணியை விரிவாக்கி மேற்கொண்டு வருகின்றது.

புலம் பெயர்ந்து நோர்வேயில் வாழும் பிள்ளைகளுக்குத், தாய்மொழிக் கல்வியைப் புகட்டுவதோடு, அவர்களின் வழமையான கல்விக்கும் உதவி வழிகாட்டுகின்ற வகையில், அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம் தனது பணியை **"ஞாயிறு உதவிப் பாடத் திட்டம்"** என்று விரிவாக்கி மேற்கொண்டு வருவது அனைவரும் பாராட்ட வேண்டிய செயற்பாடாகும்.

மேலும் தமிழ் இளைஞர் மன்றம், மூத்தோர் மன்றம் போன்ற மன்றங்களை உருவாக்கி நோர்வே தமிழ் மக்களுக்கு மருத்துவ மதியுரைகள், ஓகக் கலை, நோர்வேஜிய மொழிப் பயிற்சி, கைவேலைப் பயிற்சி, முற்றத்துப் பந்தல் நிகழ்ச்சி போன்றவற்றையும் மேற்கொண்டுவரும் அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம் கராத்தே தற்காப்புக் கலை வகுப்புக்களினூடாக தமிழிளைஞர்களின் உடல் உள உறுதியையும் தன்னம்பிக்கையையும் வளர்த்து, தமிழர்களை வளப்படுத்துகின்ற மதியுரை மையமாகச் செயற்பட்டு வருவதையிட்டு தாயகத் தமிழர்கள் பூரிப்படைகின்றனர்.

15ஆண்டுகளாக தமிழினத்துக்கு அரும் பணியாற்றி வருகின்ற நோர்வே அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம் தனது 15ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி, சிறப்பு ஆண்டு மலரையும் வெளியிடவிருக்கின்றது. இத் தமிழ்க் கலைக் கூட ஆளுகையினருக்கு எமது உளமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நன்றி –

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

இவ்வண்ணம்.

15/03/2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்...!

செஞ்சோலை
**SENCHCHOLAI**
செஞ்சோலை
இரணைமடு வீதி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.

re-m@iled 12 MRZ 2007

பதிவு இல - NEP/PCC/CH/134



01.02.2007.

அன்னைபூபதி தமிழ்க்கலைக்கூடம்,
நோர்வே.

**<u>வாழ்த்துரை</u>**

தமது தமிழ்ப்பணியில், சமூகப்பணிகளில் பதினைந்து அகவைகளைப் பூர்த்திசெய்து, இன்று ஆலமரமாக விழுதெறிந்து நிற்கும் எம்அன்புக்குரிய "அன்னைபூபதி கலைக்கூட" குடும்பத்தவர்களை, முதற்கண் மனதார மகிழ்வுபொங்க வாழ்த்துவதில் செஞ்சோலைக் குடும்பத்தினர் நிறைவடைகின்றனர்.

புலம்பெயர் சூழலில் சிறியவர்கள், பெரியவர்கள் என்று பாராது அனைத்துப் பகுதியினருக்குமான பல்வேறு வேலைத் திட்டங்களையும் ஆர்வமுடன் முன்னெடுப்பது மட்டுமன்றி, தாயகத்தில் எம்போன்ற சமூக வேலைத்திட்டங்களிற்கும் பல்லாண்டுகளாகத் தம் பங்களிப்பை ஆர்வமுடன் வழங்கிவரும் உங்கள் அனைவரையும் எம்நெஞ்சமதில் பாசமுடன் நினைவுகொள்கின்றோம்.

என்றென்றும் உங்கள்பணி தன்னலமற்ற சேவையாக எங்கும் பரந்து விரியவேண்டும். தாயகத்தின் வளர்ச்சியிலும் பரந்த பங்கை வகித்து சிறப்புடன் செயற்பட,

**அன்னைபூபதி தமிழ்க்கலைக்கூட குடும்பத்தினரை**
மீண்டும் உள்ளம் நிறைய வாழ்த்துகின்றோம்.

வாழ்க! வளர்க!

.............................
(செல்வி.ந.சுடர்மகள்)
பொறுப்பாளர்.

"செஞ்சோலைச் சிறார்கள் நாட்டின் சிற்பிகள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்...!

காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்.
KANTHARUBAN ARIVUCHCHOLAI CHILDREN HOME.

இலங்கை வங்கி,
கிளிநொச்சி 4593C

மலையாளபுரம்,
கிளிநொச்சி.

Malaiyalapuram,
Kilinochchi.

Regd.No.MU/PKI/VSSO/01
NEP/PCC/CH/88

10.03.2007,
அன்னை பூபதி கலைக்கூடம்,
நோர்வே.

## வாழ்த்துச் செய்தி

**என்றும் எம் இனிய அன்னை பூபதி கலைக்கூட உறவினர்களே வணக்கம்.**

அறிவியல் யுகம் அற்புதமாய்த் தழைத்தோங்கும் இக்காலத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, எம் தாய்மொழியின் மகத்துவத்தை இளஞ்சந்ததியின் உள்ளங்களில் ஊற்றெடுக்க வைப்பதற்காக அரும்பணியாற்றும் அன்னைபூபதி தமிழ்க்கலைக்கூடத்திற்கு எம் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றோம்.

அறிவியலின் உச்சத்தில் பண்பாடுகள் தலைகீழாக மாறும் வேளையில், எம் தமிழ்ப் பண்பாட்டை ஒருங்கிணைத்து,வழிகாட்டி, வாழ்வுக்கு ஒளியூட்டும் உங்கள் பணி மகத்தானது.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றயவை"

என்ற வள்ளுவரின் குறளுக்கு இணங்க அறிவூட்டி,சிந்தனையில் தெளிவூட்டி, தமிழ்த் தேசப்பற்றை வளர்க்கும் உங்கள் பணி போற்றத்தக்கது தேசத் தலைவரின் எண்ணத்துக்கேற்ப இளைய தலைமுறையை ஒன்று படுத்தி தமிழ்ப் பண்பாட்டையும்,மொழிப்பற்றையும் வளர்க்கும் உங்கள் பணி மெச்சத்தக்கது.

உலகினில் தமிழ் வாழும் கொள்கையூடே உயிர் கொடுக்கும் மாவீரர் நினைவோடு கரும்பினிய தமிழ்ச் சொல் எடுத்து தமிழ் வீரமூட்டும் உங்கள் பணி என்றென்றும் சிறந்து விளங்க வேண்டும்.

உடல் உள மேம்பாட்டுக்காகவும்,தன்னம்பிக்கையை வளர்க்கவும், பல வித நல்லூக்க நோக்கத்தோடும் பற்பல பணிகளை ஆற்றும் அன்னை பூபதி தமிழ் கலைக்கூடத்தின் பணி மதிக்கத்தக்கது.

கற்பித்தல் சிறப்பினாலும்,சிறப்பான நிர்வாகச் செயற்பாட்டினாலும் உங்கள் கலைக்கூடம் நாடி வரும் சிறார்கள் இன்னும் இன்னும் மேன்மை பெற வாழ்த்துக்கள்.

அன்னை பூபதி தமிழ்க்கூடத்தில் பிள்ளைகளை இணைத்தும்,கலைக்கூட வளர்ச்சிக்கு உதவும் பெற்றோர்களுக்கும் எங்கள் நல்லாசிகள்.

இக் கலைக்கூடத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபடும் ஆசிரியர்களுக்கும், அதன் இணைப்பாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், நலன் விரும்பிகளுக்கும் எமது பிள்ளைகள் சார்பாகவும் நிர்வாகத்தின் சார்பாகவும் என்றென்றும் எம் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*Gratulerer...*

**Tamilsk ressurs – og veiledningssenter**
**V/senterleder Nirmalanathan Kasinathan**



***Gratulerer med15 års jubileum***

*Bydel Stovner gratulerer Tamilsk Ressurs – og veiledningssenter med 15 års drift.*

*Senteret er for bydelen en særdeles viktig ressurs og god samarbeidspartner. På en fremragende måte viser senteret en åpenhet og raushet som omfatter både deres egne landsmenn, men som også rommer andre nasjonaliteter.*

*Det var under den tragiske tsunamikatastrofen at våre bånd ble knyttet sterkere sammen. Vi så hvordan vi kunne utnytte våre felles ressurser til beste for alle.*

*Det var også en stor glede for bydelen i 2005 å kunne tildele bydelsprisen nettopp til senteret.*

*Når vi nå går inn i en lengre periode med satsing på barn og unge i Groruddalen, er det trygt å kjenne at vi har Tamilsk ressurs – og veiledningssenter med i arbeidet for å bedre barn og unges oppvekst.*

*Vi ønsker dere lykke til i det videre arbeidet.*

*Vennlig hilsen*
***Maria Brattebakke***
***bydelsdirektør***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினியாள்

பொதிகை மலையில் பிறந்தாள்
பொய்கை மலரெனச் சிரித்தாள்
புலமை குன்றா வண்டமிழாள் - இவள்
புலத்திலும் விழுதென வளர்ந்தாள்.

பைந்தமிழணி மொழியெனக் கலந்தாள்
பகலவன் ஒளிக்கீற்றென வந்தாள்- இவள்
புலத்திலும் அடி-முடி தொடு மொழியாள்
பழத்திடை தேனென இனிப்பாள்

பல்லவ காலத்து பழந்தமிழாள் - மூப்
பெரும் அரசின் வன்மொழியாள்
புலவர்கள் போற்றிடும் நற்றமிழாள்
புலத்தினில் பேசிடும் கிளிமொழியாள்

பாரது கண்ட செந்தமிழாள் - கவி
பாரதி தந்த தீந்தமிழாள்
போரது களத்தினில் பறைசாற்றிடுவாள்
பாரினில் இனி... பாரென நிமிர்ந்திடுவாள்

பாவலர் நா இவள்... இன் மொழியாள்- இசை
பாவிடை கனிந்த தமிழிவளாம்
பனியடர் தேசத்து கனிமொழியாள்
பருவத்தில் வாலைக் குமரியிவள்

துருவத்தில் ஒளி தரும் சோதியினள்-தமிழ்
உருவத்தில் வந்தாள் மரபுதனில்
பருவங்கள் தாண்டி வந்தவளோ....
பதினைந்து ஆண்டுகள் விருட்ஷமானாள்

வாழிய வாழிய பல்லாண்டு....!
வாழ்த்தினை பாடடி பாரெங்கும் -நாம்
ஈழத்தமிழரென நீ பாடு!

யாழ்
புதுவை பொன்.கோணேஸ்
*ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியைக் காப்போம்!

**மொழியை காக்கின்ற பணியை செய்கின்றவர்களும் ஒரு வகையில் இனப்பற்றுக் கொண்ட போராளிகள் தான். அவர்கள் பேனா தூக்குகின்ற போராளிகள். நாங்கள் துப்பாக்கி தூக்குகின்ற போராளிகள்.**

*கிளிநொச்சி தமிழ்ச் சங்க பணிமனையின் திறப்பு விழாவில்*
*தமிழீழக் கல்விக்கழக பொறுப்பாளர்*

**திரு. வெ. இளங்குமரன்**

அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப்பட்டது.

எமது இனத்துக்கு மொழி தான் உயிர் போன்றது. எமது மொழியை காப்பதனூடாக எமது இறைமையையும் மொழியையும் காத்துக்கொள்ள முடியும். அந்த வகையில் தான் எமது முன்னோர்கள் பணியாற்றி வந்தார்கள்.

சங்க காலத்துக்கு முன்பிருந்த இலக்கியங்களை நோக்குகின்ற போது எமக்கென ஆக்கித் தந்த மொழிக்களஞ்சியமானது உலகின் வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவுக்கு மிகவும் தொன்மையான 90,000-க்கும் மேற்பட்ட சொற்களை களஞ்சியமாக கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றது.

அவ்வகையில் அக்காலத்தில் அத்தகைய வளம் கொண்ட மொழி இருந்ததில்லை அதற்கு பின்னர் உருவான பல மொழிகள் சொற்களை வளர்த்துக் கொண்டு உலகின் தேவைக்கேற்ப வளர்ந்து கொண்டிருக்கின்ற சூழலில் எமது மொழிக்கு எமது முன்னோர்கள் ஆக்கித் தந்த சொற்களஞ்சியத்துக்கு மேலாக வேறு சொற்களை உருவாக்கவில்லை என்பது மட்டுமல்ல, முன்னோர்கள் எமக்கெனத் தந்த சொற்கள் பலவற்றை கைவிட்டு பிறமொழி சொற்களை கடன்வாங்கி, தமிழினத்தைக் கடன்கார இனமாக தேவையற்ற முறையில் மாற்றி வைத்திருக்கின்றோம்.

அந்நிலை மாற வேண்டுமானால் எமது மொழியை வளர்க்கின்ற, உலகின் ஏனைய மொழிகளுக்கு நிகராக எமது மொழியை கொண்டு செல்லக்கூடிய அளப்பரிய பணி எம் முன்னால் உள்ளது. இந்த வகையிலே தான் இந்த மண்ணிலே எமது தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் இழந்த மண்ணை மீட்கின்ற, இறைமையை மீட்கின்ற போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இப்போராட்டத்திற்கு வழிகாட்டுகின்ற தலைவர் அவர்கள், மண்மீட்புப் போர் நடைபெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்ற அதேவேளை எமது மொழியை பிறமொழி கலப்பிலிருந்து மீட்டெடுக்கின்ற அரிய பணியை தூய்மையானது என உணர்ந்து தன் இயக்கத்தின் ஒரு பிரிவாக தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு பிரிவை ஏற்படுத்தி, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் குறிக்கோளாக எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்று இருக்கக்கூடிய வகையில் செயற்பாடுகளைச் செய்யுமாறு பணித்திருக்கின்றார்.

தமிழ்மொழிக் காப்பு என்பதும் வளர்ப்பு என்பதும் எமது கல்வியினூடாக கல்வித்துறையினூடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டியது. எமது இந்த தமிழ்மொழியை வளர்க்கின்ற பணி, காக்கின்ற பணி பள்ளிகளின் ஊடாக வளர்த்தெடுக்கப்படுகின்றது என்ற வகையிலே நாங்கள் தொடக்கப்பள்ளி செயற்பாடுகளிலே தூயதமிழை வளர்த்தெடுக்கின்ற, அறிமுகப்படுத்துகின்ற பணியை மேற்கொள்ளுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

முழுமையாகத் தூயதமிழைப் பேசுகின்ற நிலையை எமது இனத்துக்குள் கொண்டு வரவேண்டுமேயானால் அடிப்படையிலிருந்து மாணவர்களிடையே பிறமொழிக் கலப்பற்ற தமிழை நடைமுறைப்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு வேலைத்திட்டத்தினூடாக நாங்கள் தொடக்கக்கல்விப் பாடத்திட்டத்தில் இருந்த பிறமொழிச்சொற்களை அடையாளம் காட்டி அந்த சொற்களிற்கு மாற்றீடான தமிழ்மொழிச் சொற்களை அந்த இடத்தில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி ஆசிரியர்களிற்கு ஒரு பயிற்சி வகுப்பினை மேற்கொண்டோம்.

ஆரிய மொழியினால் தான் தமிழ் இனம், தமிழ் நாடு, தமிழ் மொழி எல்லாம் சிதைந்தது என்ற வரலாறை எல்லாரும் அறிந்திருப்பீர்கள். ஆயினும் ஆரியம் முதலில் சிதைத்தது தமிழ்மொழியைத் தான். மொழியை சிதைத்து, இனத்தை சிதைத்து அந்த சிதைப்பினூடாகத்தான் எம்மிடம் இருந்த இறைமையை , ஆட்சியை கைப்பற்றியது என்பது வரலாறு படித்தவர்களிற்கு நன்கு விளங்கும்.

இன்று விடுதலைப்போரினை நடாத்திக் கொண்டிருக்கின்றோம். அத்துடன் மொழியைக் காக்கின்ற பணியுடன் மொழியை வளர்க்கின்ற பணியையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. மொழியை வளர்ப்பதனூடாக தமிழரின் இன அடையாளத்தை காத்து, தமிழினத்தை அழிவுக்குள்ளாகாமல் தடுப்பதனூடாகத்தான் இன விடுதலையை அடையக்கூடிய சூழலை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

இன்றைய சூழல் பாடசாலை மாணவர்களிற்கு இன உணர்வை, மொழி உணர்வை, நாட்டுப்பற்றை ஏற்படுத்துவதன் ஊடாகத்தான் உலகமே வியக்கின்ற எமது தேசிய விடுதலையை வென்றெடுக்க முடியும். இந்த போராட்டத்தின் மூலம்தான், செயற்பாட்டின் மூலம்தான் உலகத்தில் தமிழன் என்றால் வெளிநாட்டு ஆங்கில அகராதியில கூறியிருக்கின்ற சூழலை மாற்றி ஒரு போராளி என்று தமிழரை குறிப்பிடுகின்ற ஒரு சூழல் இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்ற சமகாலத்தில் தலைவரின் வழிகாட்டலில் தமிழர்களுக்கான கழகத்தை ஏற்படுத்தி அதனூடாக தமிழ்மொழியைக் காக்கின்ற, வளர்க்கின்ற அந்த அரிய பணியையும் ஆற்ற வேண்டும் என்று பணித்திருந்தமையால் நாங்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஊடாக அந்தப்பணியை நடத்திக் கொண்டு வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத் தேசிய விடுதலையை நாங்கள் வென்றெடுக்கின்ற போது தேசிய விடுதலையை தமிழன் என்ற உணர்வோடு தமிழன் என்ற அடையாளத்தோடு இருந்து அவற்றை நுகர்கின்ற ஒரு வாய்ப்பு தமிழருக்கு இருக்கவேண்டும். அந்த வகையில் நாங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தகுதியாகத்தான் இந்த மொழியைப்பார்க்கின்றோம். மொழிப்பற்றை ஏற்படுத்துகின்ற செயற்பாட்டையும் மொழிப்பற்றோடு இனப்பற்றையும், நாட்டுப்பற்றையும் ஏற்படுத்துகின்ற உணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

அந்த வகையில் இந்த மொழியைக் காக்கின்ற போர், மண்ணை மீட்கின்ற போரில் துப்பாக்கிகளை ஏந்தி, கருவிகளை ஏந்தி இன்று போராளிகள் போராடுவதைப் போல இந்த மொழியைக்காக்கின்ற போரில் பேனாக்களை ஏந்தி மொழி அறிஞர்கள், ஆசிரியர்கள் போராட முன்வர வேண்டும்.

## பதிவுகள்



கலைக்கூட
நூலகத் திறப்பு விழா

Stovner
Bydelpris 2005




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்

கருவாக எனையேற்று
உருவொன்று உருவாக்கி
பெருவாழ்வு தரவே..
பெரும்பாடு பட்டாய் – நீ

பத்து மாதம் சுமந்தென்னை
பகலிரவு உனை வருத்தி
பத்தியம் பல பார்த்து
பக்குவமாய் தமிழ் அமுதப்
பாலைப் பாங்குடன் ஊட்டி
பலகாலம் வளர்த்தாய் நீ

பலகாத தூரம் வந்து
பகட்டு வாழ்க்கை வாழ...
பனிப்புலத்து தேசத்தில்
பகலிரவாய் உழைத்தும்...
பயன் ஏதுமில்லையிங்கு
பட்ட துன்பம் போதுமம்மா!
தமிழன் என்ற தலைமேவு...
தனித்துவ அடையாளத்தை இழந்து
தரணியில் ஏதிலியாகி விடுவேனோ என்று..
ஏக்கமொன்று அடிமனதில்.

தொலைவில் பறக்கும் பறவைக்குத் தானே
சொந்தக் கூட்டின் அவசியம் புரியும்
தொலைத்து விட்டு வந்தேனா
தொலை தூரம் எம்மின உறவுகளை
சொல்லொணாத் துயரமென்னை
சொட்டுச் சொட்டாய்க் கொல்கிறதே!

தாயே உன்னடியை முத்தமிட
தவிக்கிறேன் எந்நாளும்
தாய்மண் விலங்கொடித்து...
தமிழீழம் காணும் காலம்
வெகுதூரம் இல்லையம்மா!

திருமதி. புஸ்பராணி இளையராஜா
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ தேசத்தின்..



# தத்துவாசிரியரும் தமிழும்

மனிதகுலம் இன்று அறிவியல் வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை தொட்டுநிற்கின்றது.இந்த வளர்ச்சிப்பாதையில் பல்வேறு நாடுகளிலிருந்தும் பல்வேறுபட்ட துறைகளில் பல்வேறு மனிதர்கள் அழியாச்சுவடுகளைப் பதித்து வரலாற்றில் தமக்கென நீங்காத இடத்தைப் பெற்றுவிடுகின்றார்கள். அறிவு, வீரம்,அன்பு,பண்பு,ஈகம் என்பன மனிதர்களை மாமனிதர்கள் ஆக்கிவிடுகின்றன. அதுவும் அவற்றின் கனதி சார்ந்து ஊர்,தேசம்,உலகம் என்று எல்லைகள் விரிந்து செல்கின்றன.

உலகில் எத்தனையோ தேசிய இனங்கள் இருக்கின்றன. அந்தந்த இனங்களில் இருந்து அவ்வப்போது அபூர்வமனிதர்கள் தோற்றம் பெற்று வந்துள்ளார்கள். அந்த வகையில் ஈழத் தமிழினத்திலிருந்து நீண்ட இடைவெளிக்குப்பின் தோற்றம் பெற்ற அபூர்வமனிதர்தான் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.

விடுதலை வேண்டிப் போராடிக்கொண்டிருக்கும் ஒரு இனத்தின் களத்திற்கும்,புலத்திற்கும் இடையே ஒரு பாலமாய் இருந்து மூன்று தசாப்தங்களாய் போராடி வந்தவர் தேசபிதா பாலசிங்கம் அவர்கள். எமது இனம் விடுதலைபெற்று வளர்ச்சி பெறும் அதேவேளை புலத்தில் எம்மவர்கள் எமது மொழியைப் பேணிக்காத்து வளர்க்கவேண்டும் என்பதிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தார் கலாநிதி பாலசிங்கம் அவர்கள். புலத்தில் தாய்மொழியைக் காத்து வளர்க்கும் பெரும் பணியைப் பதினைந்து ஆண்டுகளாய் ஆற்றிவரும் அன்னை பூபதி கலைக்கூடத்தின் பதினைந்தாவது ஆண்டுமலரில் தமிழீழதேசத்தின் தத்துவாசிரியர் பற்றிய பதிவு இடம்பெறுவது பொருத்தமுடையதாய் இருக்கும்.

கலாநிதி பாலசிங்கம் அவர்கள் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சகோதரனாய், இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொள்ளும் நண்பனாய், இராசகுருவாய் முப்பதாண்டு காலமாக இருந்து தமிழீழ விடுதலைப்போரை முன்னெடுத்து போராட்டத்தின் தத்துவார்த்த நிலைப்பாடுகளை உலக அரங்கின் முன் நிறுத்திய இராஜதந்திரி. இவரின் அரசியல் அறிவும் ஆங்கிலப்புலமையும் உலக அரங்கில் இவருக்குத் தனிமதிப்பை ஈட்டிக் கொடுத்தன.இதற்கும் மேலாக இவரிடம் காணப்பட்ட உயர்ந்த மானிடப்பண்புகள் இவரிற்கு சர்வதேச அரசியல் அரங்கில் புகழாரங்களைச் சூடவைத்தன.

கலாநிதி பாலசிங்கம் அவர்கள் நகைச்சுவை உணர்வு நிரம்பப்பெற்ற ஒரு கலாரசிகன், கலைஞன். இவரது மேடைப்பேச்சுக்களில் நகைச்சுவை உணர்வு ததும்பும். கேட்போரை எப்போதும் தன் கட்டுப்பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கும் வகையில் இலகுதமிழில் எளிமையாகப் பேசும் பாங்கு எல்லோரையும் கவர்ந்ததாய் அமைந்திருந்தது. இவரது நகைச்சுவை உணர்வைக் குறிப்பிட உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகள் இவரிற்கு வழங்கிய இறுதிமரியாதை நிகழ்வின்போது இவரது இறுதிக்காலத்திலும் இவரோடு உடனிருந்த திரு சாந்தன் அவர்கள் குறிப்பிட்ட சம்பவம் ஒன்றைக்கூறுவது பொருத்தமுடையதாய் இருக்கும். கலாநிதி பாலசிங்கம் அவர்கள் புற்றுநோயின் கடுமையான தாக்கத்திற்குள்ளாகி தான் மரணத்தை நோக்கி வேகமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறார் என்று தெரிந்திருந்தும் மருத்துவப் பரிசோதனைக்காக சென்ற இடத்தில் சாந்தன் அவர்களைப் பார்த்து சோதனை செய்யவருகின்ற மருத்துவத்தாதி "யார் வருத்தக்காரன் என்டு தெரியாமல் உன்னை நோக்கி வரப்போகிறார்" என்று தனது வழமையான நகைச்சுவை உணர்வோடு கூறியிருந்தாராம்.

இந்த அரசியல் இராஜதந்திரம், நகைச்சுவை உணர்வு இவை அனைத்திற்கும் அப்பால் இவரின் தமிழ் அறிவும், தமிழ்ப்பற்றும் தனித்துவமானவை. தனது சிறுபிராயத்திலிருந்து வாசிப்பதில் அலாதியான நாட்டம் கொண்ட பாலசிங்கம் அவர்கள் ஒரு பத்திரிகையாளனாக, பேச்சாளனாக, எழுத்தாளனாக, அரசியல் விரிவுரையாளனாக, தேசத்தின் குரலாய் பரிணமித்து தமிழிலும், ஆங்கிலத்திலும் பல நூல்களையும் தந்துள்ளார். சிந்தனையைத் தூண்டும் பல தத்துவக்கட்டுரைகளை எவருக்கும் புரியும் வகையில் மிக இலகுநடையில் படைத்திருக்கும் இவரது தமிழ் நடையே தனித்தன்மை கொண்டது. பேச்சிலும் எழுத்திலும் வட்டாரத்தமிழை வளமாகப்பாவித்து தன் தமிழோடு எல்லோரையும் ஈர்த்துக்கொண்ட இலக்கியவாதி. இவரது இலக்கிய இரசனையும் தனித்தவமானதேயாகும்.

தனது ஆழ்ந்த அரசியல்பணிக்கு நடுவேயும் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் போன்றோரது எழுத்துக்களின் இலக்கியநயத்தினை எடுத்துக்கூறி அவற்றைப் படிக்கத்தூண்டுவார். தமிழை எவ்வாறு எழுதினால் அந்த எழுத்தினூடாகச் சொல்ல வந்த விடயம் வாசகனை இலகுவாகச் சென்றடையும் என்பதில் தொட்டு எந்த உவமானத்தை எங்கே வைத்து எழுதினால் அது இலக்கியச்சுவையோடு இதயங்களைத் தொடும் என்பது வரை அன்று அடேல் அன்ரி அருகிருக்க தமிழ்நாட்டின் இந்திராநகர் அடையாற்றில் அந்த வீட்டின் மரநிழலில் இருந்து சொல்லித் தந்தது என்றும் மனநிழலை விட்டு மறையாதிருக்கும்.

தி. உமைபாலன்
ஆசிரியர்

## பதிவுகள்

தாயகத்தில் இடம்பெற்ற
தமிழ்மொழிப் பாடநூலுக்கான
கருத்தமர்வு - 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலர் வகுப்பு – அ



பாலர் வகுப்பு – ஆ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலர் வகுப்பு – இ



மழலையர் வகுப்பு – அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழலையர் வகுப்பு – ஆ



மழலையர் வகுப்பு – இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்ப வகுப்பு – அ



ஆரம்ப வகுப்பு – ஆ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்ப வகுப்பு – இ



ஆரம்ப வகுப்பு – ஈ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் வகுப்பு – அ



முதலாம் வகுப்பு –ஆ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் வகுப்பு – இ



முதலாம் வகுப்பு – ஈ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் வகுப்பு – உ



இரண்டாம் வகுப்பு – அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வகுப்பு – ஆ



இரண்டாம் வகுப்பு – இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வகுப்பு – ஈ



மூன்றாம் வகுப்பு – அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்றாம் வகுப்பு – ஆ



மூன்றாம் வகுப்பு – இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்றாம் வகுப்பு – ஈ



நான்காம் வகுப்பு – அ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நான்காம் வகுப்பு – ஆ



நான்காம் வகுப்பு –இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான்காம் வகுப்பு – ஈ



ஐந்தாம் வகுப்பு – அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் வாழ்வில் பெற்றோரின் பங்கு

மழலைப் பருவத்திலே ஒரு மனிதன் மனிதனாக வாழ்வதற்கான அடி அத்திவாரங்களைச் சரியான பண்பாட்டு விழுமியத்துக் கூடாகக் கொடுத்தால் வாழ்வு என்ற பிரமாண்டமான கட்டடம் நிலைத்து நிற்கும். ஆகவே சிறிய குழந்தைகள் தமது நண்பர்களோடு அளவளாவும் பொழுதும், உண்ணும் பொழுதும், உறங்கும் பொழுதும், விளையாடும் பொழுதும், பல்வேறு செயல்களில் ஈடுபடும் பொழுதும் அவர்களைச் சரியான பாதையில் நெறிப்படுத்த வேண்டியவர்களுள் பெற்றோர் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றனர்.

பெற்றோர் என்னும் சொல் 'மக்கட் பேற்றைப் பெற்றோர்' என்று பொருள் உணர்த்துகின்றது. செல்வம் உள்ளவர்கள் அதைப் பேணிப்பாதுகாக்கும் பொறுப்பையும் கொண்டவராவர். அதேபோல் பெற்றவரும்தன்பிள்ளைகளின்நலனைப்பேணிப்பாதுகாத்துஅவர்களதுவருங்காலத்தைநல்லமுறையில் அமைத்துக் கொடுக்கும் பொறுப்பும் கொண்டவராகின்றனர் என்பதை மறந்துவிடக்கூடாது.

குழந்தைகளே எமது வருங்காலச் செல்வங்கள். அவர்களைச் சீராக வளர்ப்பது பெற்றோரின் பணியாகும். நீண்டகாலமாக என் உள்ளத்தில் கருக்கொண்டிருந்த சில கருத்துகளை, தேசிய உணர்வும் மொழிப்பற்றும் கொண்டு வாழும் எனது தமிழ் உறவுகளுடன் பரிமாறலாம் என்று எண்ணியே இதனை எழுதத் தொடங்குகின்றேன். உண்மையிலேயே நாங்கள் தமிழர். எங்கள் மொழி தமிழ். எங்களுடைய மூதாதையர்திராவிடஇனம். அந்தத்திராவிடஇனத்தின்மூலவேர்தமிழ். அந்தத்தமிழினம்எங்களுக்கென்று அடையாளப்படுத்திக் கொண்ட பண்பாடுகளை, கலைக் கூறுகளை, வாழ்வியல் உண்மைகளை நாங்கள் மறந்துவிடுகின்றோம். அதை மறந்து நாங்கள் புதிய ஒரு வாழ்வுக்குள்ளே வாழ்வதால் அந்த வாழ்விலும் முழுமை பெறாமல் இந்த வாழ்வையும் பின்பற்ற முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்புபோல் திணறுகின்ற ஒரு நிலைமைதான் எங்கள் குழந்தைகள் மத்தியில் இருக்கின்றது.

இலங்கைத் தீவில் ஏற்பட்ட சிங்கள அரசின் இன அழிப்பினால் புலம்பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் தமக்கென்றோர் அரசு, நாடு இல்லாத காரணத்தால் இன்று உலகமெங்கும் அகதிகளாக அவலவாழ்வு வாழ்கின்றனர். குழந்தைகளுக்கு உணவு முக்கியம் என்பதை யாவரும் அறிவர். ஆனால் அதேயளவு முக்கியத்துவம் அவர்களின் அரவணைப்பு, பாதுகாப்பு, பராமரிப்பு போன்றவற்றை சில பெற்றோர் மறந்துவிடுகின்றனர். பிள்ளைகளைச் சரிவர வளர்க்காவிடின் அவர்களின் உளவிருத்தி பாதிப்படையும். பிள்ளைகளின் எதிர்காலம்பற்றிச் சிந்திக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு.

இவ்வகையில் எம் இளைய சந்ததியினர் தாம் வாழும் தேசத்து மொழியைக் கட்டாயம் கற்கவேண்டி இருப்பதால் அம்மொழியோடு தொடர்புடைய எம்மினத்திற்கு ஒவ்வாத கலாசாரத்தில் சிலர் தம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமலேயே மூழ்கி மனங்களைப் பறிகொடுத்து கலாசாரச் சீரழிவுகளில் சிக்கித்தவிக்கின்றனர். இவர்கள் தம் இனம், மொழி, கலாசாரங்களை மறந்து வாழும் ஓர் சகாப்தம் உருவாகாது இருக்கப் பெற்றோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இலங்கையில் எமது கல்வி மரபில் இன்னொரு இனத்தின் பண்பாட்டுத் தொன்மையையே எமது நாட்டுக்குரிய வரலாறாகக் கற்றுப் பழகிவிட்டோம். அதுதான் எமது மக்களிடையே வரலாற்றுணர்வு குன்றிப்போனதற்கான அடிப்படைக்காரணம் என நினைக்கின்றேன். இதனால் நாம் பலவீனர்களாக, அதாவது நம்மை நாமே பிறரிலும் தாழ்ந்தவராய் எண்ணும் பொழுதுதான் நம்மீது ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. எனவே ஈழத்தமிழர் யார் என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ளக்கூடிய வரலாற்றுக் கல்வியைப் போதிப்பதன் மூலம்தான் எம் இளஞ்சந்ததியினரை இன உணர்வும், தாயகப் பற்றும், தமிழறிவும் கொண்டவர்களாக கௌரவமாக வாழவைக்கலாம்.

ஆசையை மனிதன் எப்படிக் கையாளுகின்றான் என்பதிலேயே அவன் புத்திசாலித்தனம் தங்கியுள்ளது. தன்னல ஆசைகளைவிடப் பொதுநல ஆசைகள் உயர்ந்தவை. ஆசைகள் அளவுக்குமீறிப் போகும்போது அல்லது வெறியாக மாறும்போது நம்மை ஏதாவது விதத்தில் பாதிக்கின்றது. அதைத்தான் விரலுக்கு ஏற்ற வீக்கம் இருக்க வேண்டும் என்பர். எனவே பிள்ளைகளை ஆசைக்கு அடிமைப்படுத்தாது வளர்க்க வேண்டியவர்கள் பெற்றோரே.

செல்வம் பலவாயினும் கல்விச் செல்வமும் கேள்விச் செல்வமும் பிள்ளைகளுக்கு மிகவும் அவசியமானது. நல்ல கருத்துகளை விளக்குகின்ற நூல்களைப் படிக்க வேண்டும். கல்விச் செல்வத்தை இளமையிலேயே பெறுதல் வேண்டும். இன்று அழிவின் விளிம்பில் தமிழினம் வாழ்கின்றது. எனவே புலம்பெயர் வாழ்வில் எங்கள் மாணவ சமுதாயத்தை எதிர்காலத்தின் கல்விமான்களாகவும் பொருளாதார வளம் உள்ளவர்களாகவும் உருவாக்க வேண்டியது பெற்றோரின் கடமையே ஆகும். நோக்கமற்ற கல்வி பயனற்றது. எதிர்காலநோக்கம் பிள்ளைகளுக்கு ஏற்படும்போதுதான் அவர்கள் தங்கள் முழுக்கவனத்தையும் படிப்பில் செலுத்துவர். நாம் புலம்பெயர்ந்து அந்நிய மண்ணில் வாழ்ந்தாலும் எமது இளஞ்செல்வங்கள் எம் தாய்நாட்டுக்கும் தம் கல்வியைப் பயன்படுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதை அவர்களுக்கு விளங்க வைக்க வேண்டிய பொறுப்பும் பெற்றோருடையதே.

பிள்ளைகளைப் பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டியும், கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும் வளர்க்க வேண்டும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் அயல் வீட்டுப் பிள்ளைகளை ஒப்பிட்டுப் பார்த்துக் கடிந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும். குழந்தைகளை மற்றையோர் முன்னிலையில் ஒருபோதும் பேசித்திட்டி அடித்துவிடாதீர்கள். அது அவர்களுள் ஆறாத உளவியல் தாக்கத்தை தந்துவிடுவதோடு தாழ்வு மனப்பான்மையையும் வளர்த்துவிடும். பிள்ளைகளைப் பார்க்கும் நேரமெல்லாம் படிக்கும்படி கூறும் பெற்றோரும் இருக்கின்றனர். இதனால் பிள்ளைகள் படிப்பதாகப் பாசாங்கு செய்யத் தொடங்கிவிடுவர். எனவே இதனையும் பெற்றோர் கவனிப்பது நல்லது. அதுமட்டுமன்றிச் சிறார்களை எதிலும் சரியான தீர்மானம் எடுக்கக் கூடியவர்களாகப் பழக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இந்நாட்டுப் பண்பாடு, நாகரிகமுறை, நடையுடை, பழக்கவழக்கம் என்பவற்றைச் சிலர் பிழையாகவே உள்வாங்கிப் பிழையாகச் செல்ல முற்படுகின்றனர். இந்நாட்டவரின் நல்ல கொள்கைகளை மட்டும் நாம் பின்பற்றுவது நல்லது. ஆகவே வீட்டுச் சூழலைப் பெற்றோர் நல்ல முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டியது தலையாய கடமையும், பொறுப்புமாகும். அதுமட்டுமன்றி பெற்றோர் தங்கள் முன்னேற்றத்தில் அக்கறை எடுக்கின்றார்கள் என்பதை உணரச் செய்ய வேண்டும். பிள்ளைகளின் நண்பர்களையும் அவர்களுடன் பழகுபவர்களையும் நன்றாக அறிந்து கொள்வது மிக முக்கியமானது. அவர்கள் பெற்றோருடன் ஒரு நண்பராகப் பழக வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகள் தமது சிக்கல்களை மனம் விட்டுக் கதைக்கக் கூடியதாக இருப்பர். இதனால் பிள்ளைகளின் மனதில் தெளிவு ஏற்படும்.

சில பெற்றோர் இயந்திரமாக வேலை செய்வதனால் அவர்களுக்குப் பிள்ளைகளோடு கலந்துரையாட நேரம் கிடைப்பதில்லை. புலம்பெயர் நாடுகளில் ஒவ்வொருவருக்கும் உறவினர் குறைவாகவே இருப்பதனால் பிள்ளைகள் தாம் நினைத்தபடி வாழத் தொடங்குகின்றனர். பிள்ளைகள் வளரும் பொழுது அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான நேரத்தைக் கட்டாயம் பெற்றோர் அவர்களுக்காக ஒதுக்க வேண்டும். இன்றைய சிறார்கள் நாளைய வழிகாட்டிகள் என்பதை மறந்துவிடக் கூடாது.

காலங்காலமாகச் சிங்கள அரசின் இனவாதச் செயல்களால் புண்பட்டு புலம் பெயர்ந்து வந்த தமிழினத்தைப் பண்பு கெட்டுப்போகாமலும், பாதைமாறிச் செல்லாமலும் நோர்வே நாட்டிலுள்ள அன்னைபூபதி தமிழ்க்கலைக் கூடங்களும் தமிழ் அமைப்புகளும் தாய்மொழி காத்து, தமிழ்வழி பண்பாடு பேணித் தமிழ்ப் பணி ஆற்றிவருவதுடன் தேசியப் பற்றுறுதியுடனும் தோள் கொடுத்து வருகின்றன என்பதை இத்தருணத்திற் கூறிக் கொள்வதில் பெருமை அடைகின்றேன்.

பொதுவாகவே மனிதர்கள் மட்டுமல்ல எந்த ஒரு உயிரும் கூட நெருக்கடிக்குள் தள்ளப்படும் போது தான் பன்மடங்கு ஊற்றெடுக்கின்ற வெளிப்பாடுகளாகப் பரிணமிக்கின்றன. எனவே இறுதியாகப் புலம்பெயர் தமிழ் நெஞ்சங்கள் அனைவரும் சகல வேறுபாடுகளையும் களைந்து தேசிய உணர்வும் மொழிப்பற்றும், சகோதரத்துவம், சமத்துவம், சகிப்புத்தன்மை பொருந்திய மனிதர்களாக வாழவும், புகலிட நாடுகளிலிருந்து உணர்வு குன்றாமல் எமது தாயகத்தைத் தாங்குவதில் பெரும்பலமாக இருக்கவும் அதற்கான பணியைப் பெற்றோர் அனைவரும் செய்ய வேண்டும் என்று விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி. அருள்நிதி இராதாகிருஷ்ணன்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அன்னையின் ஆசி

ஒஸ்லோ மாநகரில் ஒளிவிடும்
அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடமே!
உலகெங்கும் பேசப்படும் நீ எங்கள்...
அன்பில் மலர்ந்த மலராக..
அனைவரின் ஆசைக்கனவும் நீயாக..
இன்பக்கடலின் எல்லையாக..
தலைவன் ஈன்ற செல்வமாக..
உண்மை வேள்வித்தீயாக..
ஊறிடும் கலைகளின் நதியாக...
வானத்து வெண்ணிலவாக..
ஏழை கண்ட பெருநிதியாக...
ஐயம் இல்லா அறிவாக..
ஒளிரும் கல்விப்பெருமதியாக...
ஓங்காரப் பெருங்கடலாக..
ஔவை கண்ட பெருந்தமிழாக...
பெருமையுடனும்.. கீர்த்தியுடனும்..
பதினைந்து அல்ல,
இன்னும் பலநூறு அகவைகள் கண்டு..
தலைவனின் ஆசியுடனும்..
பெற்றோரின் வாழ்த்துக்களுடன்
பல்லாண்டு காலம் கல்விப்பணியும்
கலைப்பணியும் புரியவேண்டுமென..
இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்!

...தமிழரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்காரும் பனைக்கூடலும்

பங்குனி மாதத்துப் பகலவன் பார்வை
மருத்துவமனை மாடத்துவழியே
மறுபடி மறுபடி கசிகிறது.
இருபது வயது .....இளநிலவு
புூச்சுருண்ட மாதிரியாய்
கலைந்த ஓவியமாய் கட்டிலில் ......
தூக்க மாத்திரைகளின் தொகைவென்று
உயிர் ஊசிமுனையில் மீண்டிருக்கிறது.
அருகில் அம்மா!
கண்ணீர் கோடிழுத்த கன்னத்தோடு
கடந்த காலத்தின் மீதான
சுய விமர்சிப்பில் ......

ஐந்து வயதில்,
அயல்வீட்டு சிறாரோடு
பனியில் விளையாட விரும்பியபோதெல்லாம்
"சனியன், சளிபிடிக்கும் தடிமன்வரும்"
- தடுக்கப்பட்டிருக்கிறாள்

ஏழு வயதில்,
சிறுவர் நிகழ்ச்சிக்காய்
தொலைக்காட்சியை தொடும்போதெல்லாம்
"காசுக்கெடுத்த படக்கொப்பி பார்க்கவேணும்"
- தடுக்கப்பட்டிருக்கிறாள்

பத்து வயதில்,
பக்குவமாய் மா கரைத்து
'பவ்ளர்' சுட விரும்பியபோதெல்லாம்
"குத்தரிசி சோறுதான் குருதிக்கு நல்லது"
- தடுக்கப்பட்டிருக்கிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு வயதில்,
பார்த்துப் பார்த்து ஆசைவந்து
'பியானோ' படிக்க விரும்ப
"நடனம் படிச்சால்தான் நாலுமேடை ஏறலாம்"
- தடுக்கப்பட்டிருக்கிறாள்

பதினைந்து வயதில்,
பள்ளி நண்பர்களோடு
அருமையான ஆங்கிலப்படம் பார்க்க விரும்ப
"கழுதை, கண்டதை கடியதை காட்டுவாங்கள்"
- தடுக்கப்பட்டிருக்கிறாள்

பதினெட்டு வயதில்,
ஆழ்மன ஆதங்கம் எழுந்து
பத்திரிகையாளராய் படிக்க எத்தனிக்க
"உருப்படுவியே, உழைக்கிற வழியைப்பார்"
- தடுக்கப்பட்டிருக்கிறாள்

இருபது வயதில்,
எதிர்காலத்தை உணர்ந்து
கல்லூரி நண்பனோடு காதல் என்றபோது
"சண்டாள், சாதிசனம் எதுவென்று தெரியுமே"
- தடுக்கப்பட்டிருக்கிறாள்

அம்மா ..... அம்மா ......
அரற்றினாள் மகள்
அடிவயிற்றில் உதைவிழுந்த வலி
உயிர் துடித்து
கண்வழியே வழிகிறது!

- உண்மைகள் மீதான
ஒரு விசாரிப்பு

-- சோதியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்தாம் வகுப்பு ~ ஆ



ஐந்தாம் வகுப்பு ~ இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்தாம் வகுப்பு ~ ஈ



ஆறாம் வகுப்பு ~ அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறாம் வகுப்பு – ஆ



ஆறாம் வகுப்பு – இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறாம் வகுப்பு ~ ஈ



ஏழாம் வகுப்பு ~ அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏழாம் வகுப்பு ~ ஆ



ஏழாம் வகுப்பு ~ இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழாம் வகுப்பு ~ ஈ



எட்டாம் வகுப்பு ~ அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எட்டாம் வகுப்பு ~ ஆ



எட்டாம் வகுப்பு ~ இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்பதாம் வகுப்பு – அ



ஒன்பதாம் வகுப்பு – ஆ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்பதாம் வகுப்பு ~ இ



பத்தாம் வகுப்பு ~ அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்தாம் வகுப்பு ~ ஆ



ஞாயிறு நடன வகுப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழவளும் தம்பியும் போல..!

சிறுகதை

பனிச்சேற்றில் புதையும் கால்களைப் பயத்தோடு ஊன்றியவாறு, அம்மம்மா தயங்கவே, நான் அவரின் கையைப் பற்றிப் பிடித்துக்கொண்டு நடந்தேன். பாதைத் தடைக்கு அப்பால் அப்பா காரில் காத்து இருந்தார். வீட்டுவாசலுக்குக் கார் வரவேண்டுமானால் காசுபோட்டுத் தடைத்துலாவை உயர்த்த வேண்டும். தொடர்மாடிவீட்டு வாழ்க்கையில் இதுவும் ஒரு தொல்லையாகும்.

அன்று ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம். அதுவும் நெருங்கிய சொந்தம். போகாது இருக்கமுடியாது. குளிரையும் பொருட்படுத்தாது, கொட்டும் பனியில் கிழம்பிவிட்டோம். அம்மம்மா நாட்டில் இருந்து விடுமுறையில் எங்களைச் சந்திக்க வந்தவர். உறவினர்கள் பலரை இந்த விழாவில் காணமுடியும் என்ற காரணத்தால், காலநிலையைக் கணக்கில் எடுக்காது அவர் எம்மோடுவந்தார். உடுத்த சேலையை உயர்த்திப் பிடித்தபடி, கம்பளி ஆடைகள், மேலங்கியென ஒரு தொகை உடைகளைத் தாங்கியவராய், முதியஉடல் நடுங்க... தூறும் பனிப்பூக்களைச் சுமந்துகொண்டு, அவர் நடப்பதைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

இண்டைக்குச் சறுக்கல் இல்லை. ஈழவள் நீ கையைவிடு! அவ ஆறுதலாய் வரட்டும்.

அம்மா என்னைத் தடுத்தும், நான் அம்மம்மாவைத் தாங்கிப் பிடித்தபடியே நடந்தேன்.

காலம் பிந்திவந்தாலும் வின்ரர் தன்கோலத்தைக் குறைக்கவில்லை. தெருவெல்லாம் தேங்கிக்கிடந்த சினோவில் சிக்கியே... கார் திண்டாடி ஊர்ந்தது. நீண்டநேரம் கழியவே, ஒருவழியாய் விழா நடக்கும் மண்டபத்துக்கு வந்துசேர்ந்தோம். எம்மை அங்கு இறக்கிவிட்டு, காரைத் தரிப்பில் நிறுத்த அப்பா இடம்தேடி அலைந்தார்.

அடாது பனியடிச்சாலும் சனம் விடாது வந்திருக்கு!

என, அம்மா கிண்டல் செய்தவாறு வாசலைத்தாண்டி உள்ளே செல்லவும், நாம் அவருக்குப் பின்னேசென்று, மேலுடைகளை அதற்கான பகுதியில் மாட்டிவிட்டு, மேசையொன்றைத் தேடிப்பிடித்து எல்லோரும் அமர்ந்து கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் ஏறவிறங்க நோக்கியபடியிருந்த அம்மம்மாவை நெருங்கி நான் அமர்ந்து கொண்டேன். அவரின் உடல் குளிரால் நடுங்குவதை என்னால் உணரமுடிந்தது. உபசரிக்க வந்தவரிடம் சொல்லி, அவவுக்கு கோப்பி வரவழைத்துக் கொடுத்தேன். பாவம் அம்மம்மா!

மண்டபம் நிறைந்த திரள். காதையடைக்கும் ஓங்கிய தொனியில் பாடல்கள் ஒலித்தன. அதையும்மீறிய உரையாடல்களோடு, சிற்றுாண்டிகளைக் கொறித்தவாறு இருந்தவர்களிடையே, தான் அறிந்தவர்களை அம்மம்மா இனங்கண்டு மகிழ்ந்தவராய் உற்சாகப்பட்டார். உறவினர்பலரையும், ஊரவர்களையும் இவ்வளவுகாலம் கடந்து, இந்த அன்னிய மண்ணிலே மீண்டும் இங்கே காண்டது அவருக்கு மிகப்பெரும் மகிழ்வாக இருந்தது.

எடி பிள்ளை! அது அந்தாளின்ரை மகளல்லோ? இது இன்னாரின்ரை மோனல்லோ?...
உவ எங்கடை அவவல்லோ?...

என்றெல்லாம் சுட்டிக்காட்டி, அம்மாவிடம் வினாவிய அம்மம்மா, அவர்களோடு சென்று உரையாடத் தவித்தார்.

அம்மா! கொஞ்சம் பேசாமலுக்கு இருக்கமாட்டியளே! பாக்கிறவை என்ன நினைப்பினம்! ஒரு நாகரியம் இல்லாமல், வந்தநேரந்தொட்டுச் சும்மா சுறண்டி... அலட்டிக்கொண்டு...

அம்மம்மாவை அம்மா அப்படி அடக்கியது எனக்குத் துண்டாய்ப் பிடிக்கவில்லை. ஊரிலை எல்லோரும் எவ்வளவோ ஒற்றுமையாய் இருக்கிற அந்த வாழ்க்கையைப்பற்றி, அம்மம்மா எனக்குச் சொல்லியிருக்கிறா. நானும் தம்பியும் தமிழிலை கதைக்கிறதைக் கண்டு பெருமைப்பட்ட அம்மம்மா, எங்களோடு நிறைய உரையாடினார். அவை பெரும்பாலும் நாட்டைப்பற்றியதாக, ஊரைப்பற்றியதாக, உறவுகள் பற்றியதாக இருந்தன.

அங்க கூவெண்ட குரலுக்கு அயலட்டம் எல்லாம் வந்துகூடிவிடும். ஒருதாய் பிள்ளையள்போல நாங்கள் சீவிக்கிறம். இஞ்சை என்னண்டால்... பக்கத்து வீட்டார் ஆரெண்டு தெரியாத நிலையிலை நீங்கள் இருக்கிறியள். அதாலை எங்கடை சனத்தின்ரை அருமையை உங்களாலை விளங்கிக்கொள்ள ஏலாது...

இப்படி உணர்வோடை உரையாடிய அம்மம்மா, ஊர் உறவினர் பலரை இந்த விழாவிலை கண்டதும் குதூகலம் கொள்வதிலை தவறில்லை. அம்மாவின் புறுபுறுப்பையும் பாராது, அம்மம்மா அங்கு எழுந்து உலாவிப் பலரோடும் உரையாடிக் கொண்டிருந்தார். அவரின்ரை முகம் மகிழ்ச்சியினால் பூரித்துப்போனது.

பிறந்தநாள் கொண்டாடும் பேபிக்கு வயது பத்து. ஆம் எனக்கும் அந்தவயதுதான். அவளுக்கு உடைகளையும், நகைகளையும் மாற்றிமாற்றி அணிவித்தனர். வீடியோக்காரரின் விருப்பப்படி அங்கு அனைத்தும் நடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு பரிமாறல் தொடங்கியது. ஆனால் அப்பா உட்பட சிலர், மண்டப மூலையொன்றில் மது அருந்திக் கொண்டிருந்தனர். அவர்கள் நாட்டுத் துயரங்களையும், உணவுத் தட்டுப்பாட்டையும், பசியின் கொடுமை தாங்காது அங்கு உறவுமக்கள் உயிர்களை விடும் செய்திகளையும் பேசியவாறு, உண்டுகுடித்துக் கொண்டிருந்த நிகழ்வு, எனக்கு வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருந்தது.

பிரியாணியென்றும், இடியப்பம்... பிட்டு, நூடில்ஸ் என்றும் வகை வகையான உணவுகளோடு, கறிகளின் நிரையும் விருந்தினர்களின் விருப்பத்திற்கேற்ப உண்ண, அங்கு படைக்கப்பட்டிருந்தன.

சாப்பிட்டு முடிந்ததும், பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டு... கோப்பி, வடையோடு அது பரிமாறப்பட்டது. எல்லோருக்கும் வயிறுகள் நிறைந்த கனதியோடு, பரிசுவழங்கலும், படப்பிடிப்பும் தொடங்கின.

இன்றைய நாளின் பெரும்பகுதி இங்கையே கழிந்துவிட்டது. ஒருவாறு விடைபெறும் நேரம் நெருங்கவே, அம்மம்மா கலங்கிய கண்களோடு உறவினர்களைத் தழுவி உரையாடி... பிரிந்தார்.

அப்பா மது அருந்தியிருந்ததால், அம்மாவே காரை ஓட்டினார்.

எங்கடை ஈழவளுக்கும் இந்தப் பத்தாவது பேத்தையை பெரிசாகத்தான் கொண்டாட வேணும்!

அப்பாதான் இப்படித் தொடங்கினார். அதற்கு ஒத்து வாசித்த அம்மாவோ,

பின்னைச் சும்மாவே! ஒரு கலக்கல் கலக்கவேணும்! பெரியகோலாப் பாத்தெடுத்து, எல்லாருக்கும் சொல்லி, சாப்பாடுகள் ஓடர்பண்ணி எடுத்து... அந்தமாதிரித்தான் செய்யவேணும் ஓ!

என, அம்மா சொல்லி ஓயுமுன் குறுக்கிட்ட நான்.

உது நடக்காது! அதுக்குச் செலவுசெய்யிற காசையெல்லாம் கணக்குப்பாத்து, என்னட்டைத் தாருங்க! நான் என்ரை செஞ்சோலை உண்டியலுக்கை போடப்போறன்.

என்று நான் சொல்லவும், அம்மா உரத்ததொனியில் சீறிவிழுந்தார்,

அப்பிடித்தானோ?... அம்மம்மாவும் வந்துநிக்கிற இந்த நேரத்திலை பெரிசாக் கொண்டாடாமல், ஈழவள்! நீ எனக்கு விசரைக் கிழப்பாதை!

என்று அவர் அதட்டவும், தம்பியும் தன்ரை பிறந்தநாள் கொண்டாட்டத்தை மறுத்து, என்னைப்போன்று அதற்கான செலவீனத்தைத் தரவேண்டும் அக்காவின் உண்டியலில் போடவெனக் கேட்கவே...

பிள்ளையள் சொல்லிறது மெத்தச்சரி! உந்த அநியாயச் செலவுகளும் அலுப்புகளும் எதுக்கு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒருக்கா ஊருக்குவந்து, அந்தச் செஞ்சோலையைப் பாக்கவேணும். அதுக்குப்புறகு சொல்லுவியள். உந்த வீண் எடுப்புகளிலை சிலவெளியிற காசுகளை அதுகளுக்கு அனுப்பினால் எவ்வளவு புண்ணியம் எண்டு. ஓம்! என்ரை குஞ்சுகள் உதுகளுக்கு விளங்கினது ஏன் உங்களுக்கு விளங்குதில்லை?

அம்மம்மாவின்ரை இந்தக் காரம் நிறைந்த பேச்சு அம்மாவுக்குப் பிடிக்காவிட்டாலும், அவ மௌனமாக காரை ஓடினா. வீதிமருங்கில் இறுகிக்கிடந்த சினோக் குவியலின்மேல் காரின் ஒருபக்கச் சக்கரம் ஏறியிறங்கவே, உலுக்கலொன்று தோன்றித் தணிந்தது.

—ந. கிருஷ்ணசிங்கம்.

# பதிவுகள்



ஆசிரியர்
பயிற்சிப் பட்டறை
2004



திரு.க.வே.பாலகுமார்
இவர்களுடனான கருத்தரங்கு
2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்றவர்கள்

கிட்டிப் புள்ளும் கிளித்தட்டும்
விளையாட மறந்து
பள்ளிக்கூடமும் படமாளிகையும்
பாராமல் வளர்ந்து

கோவிலும் கொண்டாட்டமும்
வெறும் வேஷம் என்று
பாசறை வாழ்வில்
உருக்கினீரே உம்மை!

களப்புலியாய் கரிகாலன்
வழிகாட்டல் தனைப்பெற்று
நாட்டுப் பற்றையும் விடிவையும்
முழு மூச்சாய்க் கொண்டு

வீட்டு நினைப்பையும் காதலையும்
கடலுக்குள் புதைத்துவிட்டு
மண் மீட்கப் புறப்பட்டீரே – நீவிர்
கடவுளையும் வென்று விட்டீர்

கல்லையும் கசிய வைக்கும்
காவியம் படைத்திட்டீர்
மாவீரரே உம் தாயகப் பசி தீர
நேரம் அதிகமில்லை

கல்லறைகள் யாவும் வெறும் – கல்
அறைகளல்ல தம் உயிரை
உருக்கும் தியாகிகளாம் வல்லவர்கள்
வாழும் ஆலயங்கள்

கதைகள் பேசி காலத்தை
வீணடிக்காது களமாடினீர்
கற்பூர தீபங்களே நீங்கள்
காலத்தை வென்றவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசிக்கப்பட வேண்டியவைகள்
கற்கோவில்கள் அல்ல !
தேசியத்தை நேசித்த – உம்
துயிலும் இல்லங்களே !

காலத்தை வென்றவரே – உம்
புகழ் ஞாலத்தில் பரவட்டும் !
காலத்தை வென்றவரே – உம்
புகழ் ஞாலத்தில் பரவட்டும் !!

விலையற்ற இன்னுயிரை தந்தீர் –எம்
நிலையற்ற வாழ்வைப் போக்க
விளலுக்கிறைத்த நீராக விடமாட்டோம்
களமாடி வெல்வோம் காண்பீர்

மாவீரரே எம் அன்புக்குரியவரே – நீங்கள்
காலத்தை மட்டுமல்ல
கரும்புலியாய் காவியங்கள் படைத்து எம்
கனத்த இதயங்களையும் வென்றவர்கள்

காலன் உருவெடுத்த – கயவர்களின்
நாச வேலைகளால் – உம்
உயிரை உருக்கி ...
சிப்பிக்குள் முத்தாய் உறைந்து,
உயர்ந்த எம் மாவீரரே – நீவிர்
காலத்தை வென்றவர்கள் தான் !!!

உமக்கு எம் கண்ணீர் பூக்கள் சமர்ப்பணம்



*திருமதி. கலைச்செல்வி நிர்மலநாதன்*
*ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசான்

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். இறைவனுக்கு ஒப்பான பணியைச் செய்யும் ஆசிரியர்களாகிய நாம் நமது கடமைகளை உணர்ந்து சரிவர செய்ய வேண்டும். மனதில் முழு ஈடுபாட்டோடு சமூகத்திற்கு நாம் செய்யும் அர்ப்பணிப்பாக எமது கற்பித்தல் பணி அமைய வேண்டும். ஆசிரியர்களாகிய எமது பணி உயிருடனும் சதையுடனும் வாழும் குழந்தைகளுடனானது. அவர்களது இயல்புகளை அறிந்து அவர்களுக்கேற்ப கற்பித்தலை மேற்கொள்வது மிக இன்றியமையாதது.

கற்றல், கற்பித்தல் இரண்டுக்குமே ஆதாரமானவர்கள் குழந்தைகள். அன்பாலும் அரவணைப்பாலும் அவர்களை கற்றல் சூழலுக்குள் கொண்டுவர வேண்டும். அவர்கள் செய்யும் நல்லவற்றை தட்டிக் கொடுக்க வேண்டும். முடியாதவற்றையும் முடியும் என்ற தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். சமூகத்தில் ஒழுங்குடனும் ஒழுக்கத்துடனும் குழந்தை வளர ஆசியர்களாகிய நாம் வழிகாட்ட வேண்டும்.

ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய முத்தரப்பினரதும் கூட்டுறவு கற்றல், கற்பித்தலுக்கு மிகவும் அவசியம். ஆசிரியர் குழந்தையின் தனிப்பட்ட பிரச்சனைகளை பெற்றோர் மூலமாக அறிந்திருத்தல் வேண்டும். பெற்றோர் துணையுடன் கற்றலை இலகுவாக்க வேண்டும். பெற்றோருடன் குழந்தையைப் பற்றி அடிக்கடி கதைக்க வேண்டும். ஆசிரியர் தன்னில் கவனமெடுக்கின்றார் என்பதை குழந்தைக்கு உணர்த்த வேண்டும்.

முத்து முத்தான சித்திரங்கள் – இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை – நல்ல
பாதையில் சேர்க்கும் பணியெமதே

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம் – அவன்
தன்னந்தனிமையை போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் – உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி – நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே – நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே – ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்

இப்பாடல் ஒரு நல்லாசான் எப்படி இருக்கவேண்டும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எமக்குக் காட்டுகின்றது. இப்பாடலை நான் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் இருந்தபோது கற்றுக் கொண்டேன். இந்தப்பாடல் நான் ஆற்ற வேண்டிய கடமைகளை நாளும் எனக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது. தமிழீழத்தில் தற்போது ஆசிரிய கீதமாக பாவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இப்பாடலை நாமும் நமது வழிகாட்டியாக்கி எமது பணியைச் செய்வோமாக.

திருமதி. வனிதா. சிவகுமார்
ஆசிரியர்

# பதிவுகள்



Veitvet வளாகம் ஆரம்பிக்கப்படுகிறது
2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞாயிறு உதவிப் பாடத்திட்டம் - 8ம் வகுப்பு



ஞாயிறு உதவிப் பாடத்திட்டம் - 9ம் வகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞாயிறு உதவிப் பாடத்திட்டம் - 10ம் வகுப்பு



ஞாயிறு உதவிப் பாடத்திட்டம் - Gymnas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞாயிறு உதவிப் பாடத்திட்டம் – **VK1,VK2**



ஞாயிறு உதவிப் பாடத்திட்டம் –ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கில வகுப்பு – 1



ஆங்கில வகுப்பு – 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமச்சாரி

**சிறுகதை**



தமிழீழத்தின் அரசியல் தலைநகரமான கிளிநொச்சியில் இருக்கும் அழகான அமைதியான கிராமம் அது. யாழ்ப்பாண அடிபாட்டின் பின், இப்போ நகரமாக மாறி விட்டாற் போல எந்நேரமும் கலகலத்துக் கொண்டிருந்தது. ஊரை விட்டு அகதிகளாக வந்தவர்களில் சோதிநாதக் குருக்களும் ஒருவர். தன்னோடு வளர்ந்த இரு பையன்களையும் காப்பாற்றுவதற்காக பொடிநடையில் இரவோடிரவாக வெளிக்கிட்டு வந்தவருக்கு திரும்பி யாழ்ப்பாணம் போவதற்கு கொடுப்பனவு இல்லாமலே போய்விட்டது. ஒரு நாள் இரவு தூக்கத்தில் இருந்த அவர்கள் வீட்டில் மேல் வந்து விழுந்த 'செல்' குருக்களையும் மனைவியையும் காவு கொண்டு போனது.., மூத்த மகனான சுகந்தன் தந்தையின் பாதையில் , அம்மன் கோயிலின் அர்ச்சகரானான். தம்பி சுபானனுக்கு தாய் தந்தையர் பிரிவு மிகுந்த வேதனையை ஊட்டிவிட தன் நண்பன் உதவியுடன் வெளிநாடு சென்று விட்டான்.

காலங்கள் உருண்டோடின. சுகந்தன் குருக்கள் நாற்பது வயதாகியும் பிரம்மச்சாரியாகவே அந்தக் கோயிலில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பிரம்மச்சாரி வாழ்க்கை என்பது கத்தியில் நடப்பது போல் ரொம்பவும் ஆபத்தானது என்பதை அனுபவ மூலம் உணர்ந்தவர் அவர். பூசைக்கு வரும் இளைஞர் கூட்டத்திற்கு பிரசாதம் வழங்கும் போது... எங்காவது அவர் கை முட்டிவிட்டால் போதும்.. "ஐயருக்கு சபலம், பொம்பிளைகளை இடிக்கிறார்" எனக் கதை பரவும் யாரையாவது திருமணம் செய்து கொண்டு இந்த ஆயுள் தண்டனையில் இருந்து விடுபடலாம் என்றால் அதை உரிமையுடன் செய்து வைக்க அவருக்கு தான் உறவுகளே இல்லையே! இளமைக் காலத்தில் பெற்றோரை இழப்பது போன்ற கொடுமை வேறு எதுவும் இல்லை!

அன்றும் பூசையை முடித்து விட்டு மிதியுந்தில் தன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார் சுகந்தன் குருக்கள். மத்தியான வெய்யில் உச்சியைப் பிளந்து கொண்டிருந்தது. தன் மிதியுந்தை வீட்டு முன்னால் நின்ற மரத்தில் சாத்திவிட்டு, உள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டார். பக்கத்து வீட்டுப் பையன் உரத்த குரலில் தன் பள்ளிப் பாடத்தை வாசித்துக் கொண்டிருந்தான். கூரை மேல் காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது. வெளியே ஆட்கள் தமது வேலைகளுக்குப் போவதும் வருவதுமாக இருந்தார்கள். "ஹம் .. இப்படி இருந்தா .. வயிற்றுப் பசிக்கு வைக்கலையா சாப்பிடுவது! ஏதாவது சமைப்பம்". தன் மேலே சலித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவராய் எழுந்தபோது , வெளியே சென்று கொண்டிருந்தவர்களின் பேச்சுக் குரல் அவர் காதுகளில் விழுந்தது. "இஞ்ச பாரன் பிராமணியை இறைச்சியைத் தின்றிட்டு எலும்பை எறிஞ்சிருக்கிறார், காகங்கள் வைத்து தின்கின்றன. காலம் கெட்டுப் போச்சு" ஐயருக்கு உள்ளம் பதை பதைத்துப் போனது. வெளியே ஓடி வந்து பாரத்தார். காகங்கள் இரண்டு எலும்புத் துண்டுகளுடன் மற்றைய காகங்களை அழைத்துக் கொண்டிருந்தன. ஐயர் அவசரமாக ஒரு தடியை எடுத்து காகங்களைக் கலைக்கத் தொடங்கினார். "பாரன் இந்தப் பிராமணியை ..... காகத்துக்குகூட சோறு வைக்காத கஞ்சனாக இருக்கிறானே" பின்னால் வந்த இருவர் இப்படி முணு முணுத்துக் கொண்டே போனார்கள். ஐயர் தடியைக் கீழே போட்டுவிட்டு, அவர்களுக்கு விளக்கம் கொடுத்தார். அவர்களோ மௌனமாக கேட்டு விட்டு தம் நடையைத் தொடர்ந்தார்கள். அவர்களில் மனைவி கணவனைப் பார்த்து "பார்த்தீங்களே ! ஐயர் எங்களுக்கு கதை விடுறார். இத்தனை குடிமனைகளையும் தாண்டி ஐயர் வீடு எண்டு காகம் தேடிக் கண்டு பிடிச்சுருக்கு போல.." அதற்கு அவள் கணவனோ "சபலம் ஆரை விட்டது..எங்களுக்கு ஏன் வீண் சோலி .. நீ வா!" ஐயர் திகைத்து நின்றார். கனகாம்பிகை அம்மா! நீ தான் இந்த சனங்களைக் காப்பாற்ற வேணும் மனதுக்குள் முனகியவாறே உள்ளே வந்தார். எதிர் வீட்டு பையன் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தான்.

*"கண்ணால் காண்பதும் பொய்!*
*காதால் கேட்பதுவும் பொய்!*
*தீர விசாரித்து அறிவதே மேல்!"*

*திருமதி . யோகேஸ்வரி அருணகிரிநாதர்.*
*ஆசிரியர்*

# பதிவுகள்



தமிழர்வள ஆலோசனை மையத்தின் வருடாந்த ஒன்றுகூடல் -2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சனிக்கிழமை - நடனவகுப்பு



சங்கீதவகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிருதங்க வகுப்பு - சனிக்கிழமை



மிருதங்க வகுப்பு - ஞாயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீணைவகுப்பு - சனிக்கிழமை



வீணைவகுப்பு - ஞாயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயலின் வகுப்பு




புல்லாங்குழல் வகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சித்திர வகுப்பு






சுரத்தட்டு வகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடனம் - இறுதியாண்டு மாணவிகள்



கராட்டி வகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வியும் மனித இணையமும்

கலாநிதி இளங்கோ பாலசிங்கம்

## -வெற்றிகரமானதோர் புலம்பெயர் சமூகமாகுவதற்கான திறவுகோல்!

1980 களில் வாழ்ந்த நோர்வேத் தமிழர்கள், கடின உழைப்பாளிகளெனவும், சேவை மனப்பான்மை உள்ளவர்களெனவும், நோர்வே தொழில் வழங்குநர்களால் சித்தரிக்கப்பட்டனர். பரபரப்பான செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் வணிகப் பத்திரிகைகள் எம்மை "நோர்வேயின் சுத்திகரிப்பாளர்கள்" என்று காட்சிப்படுத்தின. அந்த வேளையில் எம்மில் அனேகமானோர் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகச் செயற்பட்ட காரணத்தினாலேயே இது பிரதானமாக நிகழ்ந்தது. இந்தத் துறை, இந்நாட்களில் நோர்வேயின் தொழிற் சந்தையினுள் பிரவேசிக்க விழையும் புலம்பெயர்ந்தோர் பலருக்கு ஒரு நடைமுறைச் சாத்தியமான புகலிடமாகவே உள்ளது. இதன் விளைவாக, ஒரளவுக்கு, ஆகக் குறைந்த ஊதியம் கிடைக்கின்ற துறைகளில் ஒன்றாக இத்துறை ஆக்கப்பட்டுள்ளது. செய்யும் தொழிலை எதிர்காலத்தில் மேம்படுத்திக் கொள்வதற்கான சாத்தியம் இத்துறையில் கிடையாதென்றே கூறலாம்.

அந்த நாட்களிலிருந்து தமிழர்கள் அந்த அடிப்படை மட்டத்திலினின்றும் எழுந்து, சிறந்த எதிர்காலத்தை உடைய பல்வேறு துறைகளில் இடந்தேடிக் கொண்டுள்ளனர். தொழிற் சந்தையின் பல்வேறு துறைகளில் இவர்கள் ஈட்டிய உன்னத சாதனைகளின் பெறுபேறாக இவர்களது சமூக, பொருளாதார அந்தஸ்து உயர்ந்துள்ளன. நோர்வே மக்கள் மத்தியில் இவர்கள் தம்மைப் பற்றிய மிகவும் சிறந்ததோர் அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

நோர்வேயில் எமது மக்கள் முகங்கொடுக்கும் சில பிரச்சனைகள், தோல்விகள் என்பவை சம்பந்தமான எனது அபிப்பிராயத்தையும், என்னைப் போன்று சிந்திப்பவர்களுடைய அபிப்பிராயங்களையும் இங்கு உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். எனவே நாம் ஒரு திறந்த, பயனுள்ள சிந்தனையாடலை ஆரம்பிப்போம்.

நோர்வே கருத்தாய்வுத் துறையினால் தரப்பட்டுள்ள வருடாந்த புள்ளிவிபரத்தை நாம் கவனமாக ஆராய்வோமானால், பல துறைகளில் சீர்மை அடைவதற்கு இன்னமும் நிறையவே இடமுள்ளது என்பதைக் காணலாம். இடைநிலைக் கல்வியைப் பூரணமாக முடிக்காமலே கணிசமான மாணவர்கள் எம்மத்தியில் உள்ளனர் என்பதை இத் தரவுகள் காட்டுகின்றன. இதனால், மிகக் குறைந்த வாய்ப்புக்கள் உள்ள துறைகளிலேயே இவர்கள் முடங்கிவிட நேரிடுகின்றது. மறுபுறத்தில், தொழில்புரிவோர் மத்தியில் மிக அதிகமான விகிதத்தில் எமது ஆண்களும், பெண்களும் உள்ளனர். நாம் இந்த விடயத்தில் நோர்வே இனத்தினரையும் விஞ்சியுள்ளோம்! இது ஓர் பிரமிக்கத்தக்க வளர்ச்சியாகும்! ஆயினும், அனேகமான தமிழ்க் குடும்பத்தினரின் சராசரி வருமானம், சராசரி தேசிய வருமானத்தைவிடக் குறைவாகவே உள்ளது. எம்மவர்களில் அனேகர் இன்னமும் குறைந்த வருமானம் தரும் தொழில்களையே செய்கின்றனர் என்பதையே இது காட்டுகின்றது.

அண்மைக் காலத்தில் இளைஞர்கள், அதிகரிக்கும் எண்ணிக்கையில் சிறுதிருட்டுக்கள் தொடக்கம் குழு ரீதியிலும், சட்டபூர்வமற்ற செயல்களிலும், குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர் என சில அறிக்கைகள் குறிக்கின்றன. இவர்களில் சிலர் போதைப் பொருள் பாவனை செய்வதும் அவதானிக்கப் பட்டுள்ளது! கணவன்மாரினால் பாதிக்கப்பட்ட இளந்தாய்மார் பலர், அரசினால் நடாத்தப்படும் 'நெருக்கடி' நிலையங்களில் புகலடைந்துள்ளனர். சூதாட்டமும், மிதமிஞ்சிய மதுப்பாவனையும் இந்த விடயத்தில் மிகப்பலமான காரணிகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன எனக் காவற்துறையினர் அறிவித்துள்ளனர். கடந்த பதினைந்து வருட காலத்தில், அன்னை பூபதி தமிழ்க் கலாச்சார நிலையம், எமது பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி, கலாச்சாரம் என்பவற்றில் கல்வியளிக்கின்ற தாபனங்களில் மிகப் பெரியதாக உள்ளது. இதன் அர்த்தம் என்னவெனில், எமது தமிழ்க் கலாச்சாரப் பாரம்பரியத்தினின்று பிரிக்கமுடியாத அம்சங்களாகிய வீறுமிக்க தமிழ்மொழி, அற்புதமான வாய்ப்பாட்டு, பிரமிப்பூட்டும் நடனம், நாடகம், கீழைத்தேய வாத்தியக் கருவிகள் என்பனவற்றுக்கு எமது பிள்ளைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளனர் என்பதாகும்.

மாலையிலும், சனி ஞாயிறுகளிலும் களைப்பின்றி எமது குழந்தைகளுக்குக் கற்பிப்பதுடன், அவர்களுக்கோர் அதிசிறந்த கற்றல் சூழலை அளிக்கும் அவர்களது ஆசிரியர்களினதும், நிர்வாகத்தினரதும் மாண்புமிகு குணாதிசயங்களுக்கு நாம் எல்லையற்ற நன்றி உடையவராக உள்ளோம்.

இளையோர் தமது இடைநிலைக் கல்வியை வெற்றிகரமாக முடிப்பதற்கும், உயர் கல்வி நிலையங்களில் இடம் பிடிப்பதற்கும் உதவியளிக்கும் கற்பித்தல் திட்டம் இந்த நிலையத்தில் கைக்கொள்ளப்படுவது ஒரு அற்புத சாதனையாகும்!

இந்தத் திட்டம் போன்ற செயற்பாடுகளை நாடு முழுவதுமே ஆதரிக்க விரும்புவதாக, நோர்வேயின் மிகப்பெரிய கட்சியும், அரசில் அங்கத்துவம் வகிக்கின்ற கட்சியுமாகிய தொழிற் கட்சி, அண்மையில் அறிவித்துள்ளது!

இந் நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்படும் விளையாட்டுச் செயற்பாடுகளும், போட்டிகளும், உடலைச் சுறுசுறுப்பாக வைத்திருப்பதில் உள்ள சிறப்பை அறிந்து கொள்வதற்கும், வெவ்வேறு போட்டிகளில் பங்குபற்றுவதற்கும் எமது பிள்ளைகளுக்கு அதிசிறந்த வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. வெற்றியீட்டும் மனப்பாங்கை இப்போட்டிகள் பிள்ளைகளுக்கு அளித்து, அவர்களது வாழ்க்கையின் எதிர்கால வெற்றிக்கு அவசியமாகிய ஊக்கத்தை வழங்கச் சந்தர்ப்பமுண்டு!

புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழ்கின்ற தமிழ்ச் சமூகம், அன்னை பூபதி தமிழ்க் கலாச்சார நிலையம் போன்ற தாபனங்களிடம் வழிகாட்டலும், உதவியும் தேடுகின்றது.

விசேடமாக, எதிர்வரும் வருடங்களில், எல்லாத் துறைகளிலுமே எமது சமூகத்திற்கு உதவி வழங்குவதில் பெரும்பங்கை வகிக்கவேண்டிய கடமை இந்நிலையத்துக்கு உண்டு.

எதிர்காலத்தில் நாம் பாதுகாப்பு நிலையங்களுக்கு செல்லவேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில், எமது பிள்ளைகளும், தாய்மாரும், தம்மை எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து அவற்றைத் தீர்ப்பதற்கு உதவும் வகையில், இந் நிலையம் ஒரு திட்டத்தை வரைந்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்வதற்கான அடிப்படை விருப்புக்களைக் கொண்ட வயதானவர்கள், அவற்றை நிறைவேற்றிக் கொள்ளவும், அவர்கள் தமது இளைப்பாறுதற் காலத்தை சந்தோசமாக சுகிக்கவும், இந்த நோர்வே மண்ணிலே நிம்மதியுடன் மரணிக்கவும் உதவும் ஒரு திட்டத்தை உருவாக்க ஆரம்பிக்க வேண்டிய தேவையும் உண்டு.

உயர்கல்வித் துறையில் பிரவேசிப்பதிலும், அதை பூரணப்படுத்துவதிலும் இளவயதினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை அணுகுவதிலும், அவர்கள் தமக்கான எதிர்காலத் தொழிலைத் தேர்ந்தெடுப்பதிலும் உதவியாக இருக்கக்கூடிய விடயங்களில், இந் நிலையம் மேலும் தன்னார்வம் மிக்கதாகச் செயற்படவேண்டிய அவசியமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சந்தையில் தமது தொழிலில் சிறப்பதற்கு, இளவயதினர் ஏனையோருடன் இணைந்து செயற்படக்கூடிய மனித-இணையங்கள் உருவாக்கப்பட வேண்டியது முக்கியமான விடயமாக இருக்கலாம். அவ்வகையான வழிகாட்டுதல்கள் அவர்கள் பொதுத்துறையிலும், தனியார்துறையிலும், உயர்மட்ட நிலையாளர்களுடன் இணைந்து இயங்கும் வாய்ப்பை வழங்கக்கூடும்.

வளர்ந்தவர்க்கான கல்வி, தொடர்ச்சியான தொழில் வழிகாட்டல் திட்டங்கள் என்பன, வளர்ந்தவர்கள் தமது எதிர்காலத் தேவைகளை அடையாளம் காணவும், அவற்றுக்குரிய வகையில் தமது திறமைகளைச் சமகால நிலைக்கு உயர்த்திக் கொள்ளவும், தொழிற்சந்தையில் வெற்றியடையவும் உதவக்கூடும். வியாபாரம், விஞ்ஞானம், பொறியியல், அரசியல் போன்ற ஏனைய துறைகளில் வெற்றி எய்திய ஒரு 'மக்கள் குழு' வாக நாமும் ஆவதற்கு இது உதவியாக இருக்கக்கூடும். ஒவ்வொரு தனிப்பட்ட தமிழரும் அடைகின்ற வெற்றி, நோர்வேயின் அதிகாரபூர்வமான கொள்கைளையும், ஏன் ஒருவேளை ஐரோப்பிய ஒன்றியம், அதன் சர்வதேசக் கொள்கைகள் என்பனவற்றில்கூடச் செல்வாக்குச் செலுத்தி, சிறீலங்காவில் எமது மக்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவர உதவியாக அமையலாம்.

எமது பிரச்சனைகள் சம்பந்தமான அணுகுமுறைகள் எவ்வாறிருக்க வேண்டும் என்ற, நோர்வே மக்களின் பொது அபிப்பிராயத்தில், செல்வாக்குச் செலுத்தவும் இதனால் இயலக்கூடும்.

உங்களது உழைப்பை நான் சிலாகிப்பதுடன் உங்களுக்கு வணக்கமும் செய்கின்றேன். எமது மக்களை வளப்படுத்துவதற்கும், நோர்வேயில் அவர்கள் தமது எதிர்கால இலக்குகளை அடைவதற்கான வலுவைப் பெறுவதற்கும், வழிகாட்டலும் தலைமைத்துவமும் அளிப்பதில் செயற்துடிப்புடன் இயங்குவீர்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன்.

அன்னை பூபதி தமிழ்க் கலாச்சார நிலையத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவையொட்டியும், தொடரவிருக்கும் பல்லாண்டுகளைக் கருத்திற் கொண்டும் எனது அதியுயர்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக!

Dr. Ilangko Balasingham
Professor of Medical Signal Processing
Rikshospitalet University Hospital, Oslo
Norwegian University of Science & Technology,
Trondheim.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் : அ.பாலமனோகரன் (டென்மார்க்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைக்கூட விளையாட்டுக்குழு



றொம்மன்– சிற்றுண்டிச்சாலைப் பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையமாணவர் பதிவு

*கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக*

எனது பெயர் சுகீலசாந்தி குணரட்ணம். 1994ம் ஆண்டில் அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினேன். பாடசாலையில் ஆசிரியர்கள் மிகவும் அன்பாகப் பாடம் கற்பித்தனர். அவர்களின் அறிவுரையும், போதிக்கும் தன்மையும் என்னை மிகவும் கவர்ந்து கொண்டது. ஆதலால் கலைக்கூடத்தில் அனைத்து கல்வியியற் போட்டிகளிலும் சிறந்து விளங்கினேன்.

அத்துடன் பரதம், சங்கீதம் என கலைப்பாடங்களையும் பயின்றேன். பரதத்தை ஆரம்பத்தில் எமது அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் பயின்றேன். இன்று பரதநாட்டியத்தை முழுமையாகப் பயின்று நாட்டியக்கலாஜோதி, நர்த்தனத்தாரகி பட்டம்பெற்று நடன ஆசிரியையாகியுள்ளேன். அன்னைபூபதி பாடசாலையில் பேச்சுப்போட்டி, விளையாட்டுப்போட்டி, எழுத்துத்திறன் போட்டி, இப்படி பலவகையான போட்டிகளை மாணவர்களிடையே ஏற்படுத்தி மாணவர்களை ஊக்கப்படுத்துவதுண்டு.

அந்த வகையில் நான் பத்து ஆண்டுகளிலும் தவறாது பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு எனது பேச்சாற்றலை வெளிப்படுத்தி பரிசில்களைப் பெற்றுள்ளேன். எழுத்துத்திறன் போட்டியிலும் பரிசில்கள் பெற்றேன். விளையாட்டுப் போட்டிகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றுவேன். விளையாட்டு என்றால் எனக்கு கொள்ளைப் பிரியம். எனது திறமை கண்டு ஆசிரியரும் பெற்றோரும் ஊக்கப்படுத்துவதுண்டு. பாடசாலையில் பத்துவருடங்கள் சிறந்த வீராங்கனை என்ற பட்டத்தைப் பெற்றேன். இந்தப் பெருமை எனது பெற்றோரையும் கல்விக்கூடத்தையும் சாரும்.

தாய்மொழியைக் கற்றால் வேற்று மொழிகளை கற்பது இலகுவானது என்பது அறிஞோரின் வாக்கு. இது உண்மை என்பதை நான் அறிந்தேன். நான் கற்றுக்கொண்ட தமிழினால் தாய்மொழிப் (தமிழ்மொழிப்) பரீட்சையில் தரம் ஒன்றில் சித்தியெய்தினேன், இது எனது மேற்படிப்புக்கு உதவியது. அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் எமது மண்ணின் மைந்தர்கள் வருகை தந்து கலந்துரையாடல் மற்றும் நிகழ்வுகளை நடாத்துவதுண்டு. மற்றும் புத்தக வெளியீடுகள், இப்படி பல நிகழ்வுகள்! இப்படியான நிகழ்வுகளில் எனக்கு கவிதைகள் மொழியும் வாய்ப்புக்கள் கிடைத்தன. இப்படியாக பல நன்மைகள் எமது கலைக்கூடத்தால் எனக்கு கிட்டியது மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். தமிழர்களின் கலை, கலாச்சாரம் ,பண்பாடு ஆகியவற்றையும் வளர்ப்பதில் எமது கலைக்கூடம் மிளிர்வதையெண்ணி பெருமையடைகின்றேன்.

எமது தேசியத்தலைவரின் தொலைதூர நோக்குச் சிந்தனையை எமது கலைக்கூடம் நிறைவேற்றுகின்றது. நாம் தமிழீழத்துக்கு சென்றபோது எமது பாட்டன், பாட்டி, பூட்டன், பூட்டி, மாமா, மாமி என்று இப்படியான உறவுகளுடன் எமது தாய்மொழியில் உரையாடும் போது அவர்கள் வியப்புக்குள்ளானார்கள். நோர்வேயில் வாழுகின்ற எமது இளைய தமிழ்ச்சமூகம் மொழியாற்றல் வளர்ப்பதற்கு உதவும் எமது அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடத்துக்கு நோர்வே வாழ் தமிழர்களாகிய நாம் என்றும் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் நான் கல்வி பயின்ற பள்ளியிலேயே ஆசிரியையாக தமிழ் கற்பிக்கின்றேன், இதையெண்ணும் போது எனது மனம் புளகாங்கிதம் அடைகின்றது. பழைய மாணவர்களை தெரிவு செய்து கற்பிக்க வைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பான விடயம். நான் பயின்ற கல்வியை மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடருவேன். மென்மேலும் அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம் சிறந்து விளங்க வேண்டும், பல ஆண்டுகளை கடந்து வீறு நடைபோடவேண்டும் என்று கூறி பதினைந்து வருட ஆண்டுவிழா சிறப்பிக்க வாழ்த்துகின்றேன்.

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்

நன்றி

சுசீலசாந்தி குணரட்ணம்

# பழையமாணவர் பதிவு

## தமிழர் என்ற பெருமையோடு...

**நோ**ர்வே நாட்டில் தமிழ்ச் சிறார்களும் இளையோர்களும் எமது தாய் மொழியாகிய தமிழைக் கற்றுப் பயன்பெறவும், கலை பண்பாட்டு அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்கவும் வழிவகை செய்து பணியாற்றி வருகின்றது அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம். சிறு தொகையான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டாலும் இன்று பல நூற்றுக்கணக்கான மணவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்த வளர்ச்சியைப் பார்க்கும் போது அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் கல்வி கற்றதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்தோடு ஞாயிறு உதவிப்பாடத்திட்டத்தின் மூலமாக தமிழ் மாணவர்களை உயர்கல்வியில் ஊக்குவித்து வழிகாட்டும் கலைக்கூடத்தின் பணி மிக முக்கியமானது.

அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடத்திலும், ஞாயிறு உதவிப்பாடத்திட்டத்திலும் கல்வி பயின்று பயன் பெற்ற பலருள் நானும் ஒருத்தி என்பதையிட்டு மகிழ்வடைகின்றேன் இப்போ நான் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில், உயிரியல்-இரசாயனவியல் துறையில் (Molekylær biologi og biologisk kjemi) 3வது ஆண்டில் எனது உயர்கல்வியைப் பயில்வதோடு, ஞாயிறு உதவிபாடத்திட்டத்தில் ஆசிரியராகவும் கடமை ஆற்றுகின்றேன்.

உதவிப் பாடத்திட்டத்தின் மூலம் எமது இளைய தலைமுறையினரின் கல்வி மேம்பாட்டுக்குரிய எனது பங்களிப்பை வழங்குவதில் மனநிறைவு அடைகின்றேன்.அன்னைபூபதி தமிழ்க் கலைகூடம் தனது கல்வி மற்றும் சமூகம் நோக்கிய பணியில் 15 ஆண்டுகளை நிறைவு செய்வதையிட்டு எனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறேன்.

அதேவேளை, நோர்வே நாட்டில் வாழ்கின்ற நாம் தாய்மொழியையும், தமிழ் இன அடையாளத்தையும் பண்பாட்டையும் பேணுவதன் மூலமே தமிழர் என்ற பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கின்றோம்!!

*தீபா ஜெயரட்ணம்*

*உயிரியல் துறை மாணவி, ஒஸ்லோ பல்கலைக் கழகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோர் முற்றம்..



மூத்தோர் முற்ற உறுப்பினர்களும் உதவியாளரும்

நோர்வே வாழ் மூத்த தமிழர்களின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு,தமிழர் வள ஆலோசனை மையத்தின் ஆதரவுடன் 15-03-2001ம் ஆண்டு அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூட றொம்மன் வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட மூத்தோர் முற்றம் ஆறு ஆண்டுகளை எட்டி ஆறாய்ப் பெருகி இன்று வீறு நடை போடுகின்றது.

இம் முற்றத்தில் ஐம்பது வயதிற்கு மேற்பட்ட தமிழர்கள் அங்கம் வகிக்கின்றனர். முக்கியமாகத் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து தம் பிள்ளைகளுடன் வாழும் மூத்தோரும் , நீடிய காலமாக இம் மண்ணில் வாழும் மூத்தோரும், தம் வயதினருடன் மனம் விட்டுப் பேசவும், தமது பொழுதை இனிதே போக்கிக் கொள்ளவும் உடல், உள நலன்களைப் பேணிப் பாதுகாக்கவும் ஆவன செய்யும் முகமாக முற்றத்தின் செயற்பாடுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

யோகாசனப் பயிற்சி,தமிழ் மூலம் நோர்வேஜிய மொழி கற்றல், கைப்பணிப்பயிற்சி, முதலுதவிப் பயிற்சி போன்றவற்றுடன் மருத்துவர்களின் ஆலோசனைகளும் அவ்வப்போது வழங்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. யோகாசனக் கலையை முறைப்படி பயின்ற ஆசானிடம் இக் கலையை மூத்தோர் பயின்று பலனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. வாராந்த சந்திப்பில் இடம்பெறும் 'முற்றத்துப்பந்தல்' என்னும் நிகழ்வில் நாட்டுநடப்பு, சேர்ந்துபாடுதல், அரசியல், படித்துச்சுவைத்தவை, மருத்துவ ஆலோசனைகளுடன், அனைவரது பிறந்த நாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எதிர் காலத்தில் இம்மண்ணில் நீடிய காலமாக வாழ்கின்றவர்கள் இணையும் போது, அவர்களின் தேவை கருதி எமது கட்டமைப்பில் புதிய செயற் திட்டங்களை உருவாக்க ஆலோசித்துள்ளோம்.

இது தவிர முற்றத்துக் கலைஞர்கள் இணைந்து, வானொலி நாடகம், கவியரங்கம், கவிதாநிகழ்வு, வில்லிசை, குறும்படம் போன்ற கலை நிகழ்வுகளை அவ்வப்போது நிகழ்த்தி வருகின்றனர்.மேலும் பல சுற்றுலாக்களில் பங்கேற்று மன மகிழ்வு அடைந்த முற்றத்து மூத்தோர் மன நிறைவுடன் வளமே வாழ்கின்றனர்.

*றொபேட் ஜெயானந்தன்.*

*மூத்தோர் முற்றப் பொறுப்பாளர்.*

அன்று அமைத்தோம் அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடத்தில்,
மூத்தோர் முற்றத்தினை
அரவணைத்தோம் அன்புடன் எம் மூத்தவரை.
முயற்சி எடுத்தோம், முயன்றோம், மூவிரு ஆண்டுகள் உருண்டோடின.
முற்றத்துப் பந்தலமைத்து முழுநிலவில் மகிழ்ந்திட்டோம்.
வயதினில் மூத்தவர் வந்து சேருவர் வாரமொருமுறை புதன் மாலையில்
வந்த நாளினை எண்ணியே வாழ்ந்திடுவார் வாரமெல்லாம் .
என்று வரும் புதனென்று ஏங்கித் தவித்திடுவார்.
எப்பொழுதிலாவது கண்டிடுவார், கனவினில் களிப்பின் கலகலப்பை.
மூத்தோர் நாம், எம்மால் முடியாதது ஒன்றில்லை என்றிடுவார்.
முணுமுணுத்தாலும் , முழுமனத்துடன் முயற்சி எடுத்திடுவர் .
ஆழமான அறிவுடன் அமைதியாகச் சிந்தித்து,
அனுபவ ரீதியாக ஆற்றிடுவார் சேவைகள் பற்பல
பட்டறிவு இருப்பதால்,பழகிடுவர் பரிவுடனே .
பண்புடனும் பாசத்துடனும் நல்ல பல விடயங்களை நயமாக
எடுத்துரைத்திடும்
எம் மூத்தோர் முற்றத்தினர் நாளும் நலமுடன் நம்பி நடமாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைப்பண்பு

உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் அந்தந்த நாட்டின் பண்புகளுக்கேற்றவாறு இசையானது அமைந்து வழங்கி வருகின்றது. 'இசை' இனிமையானது. எந்த நாட்டு இசையாக இருப்பினும் அதன் வசப்படுவதும் , கேட்டு மகிழ்வதும் இசைச்செவி படைத்தோரின் இயல்புத்தன்மையாகும். சொற்களால் வெளிப்படுத்த இயலாத நுட்பமான கருத்துக்களை இசை மூலம் வெளிப்படுத்தலாம்.

" ஏழிசையாய் இசைப்பயனாய் ... ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே...." என்றெல்லாம் பாடிப்பணிந்த இசையானது மதம், நிறம், மொழி, நாடு என்பவற்றை கடந்த ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படச் செய்யும் பண்பையுடையது இசை. இந்த ஈடு இணையற்ற தனித்துவம் கொண்டது இசை. இறை வழிபாட்டில் இசை வழிபாடு தான் சிறந்த மார்க்கமென தொன்று தொட்டு விளங்குகின்றது. இசை தான் முத்தமிழாம் இயல் , இசை, நாடகத்தில் நடு நாயகமாகத் திகழும் இசை லலித கலைகளுள் முதன்மையாக உள்ளது. நெடுங்காலத்திற்கு முன்பே எமது முன்னோர்கள் படைத்த இலக்கிய நூல்கள் , சரித்திரங்கள் மூலம் இசைப்பண்பையும் அதன் முக்கியத்துவத்தையும் அறிய முடிகிறது. தமிழும் இசையும் ஒன்றோடொன்று இணைந்துள்ளது போல் வாத்தியம் , நிருத்யம் , இசை என்ற மூன்றும் ஒன்றிற்கு ஒன்று தொடர்பு உடையதாகும். இதில் இசையின் பங்களிப்பு போற்றுதற்குரிய பண்பாக அமைந்துள்ளது.

அன்னையின் தாலாட்டில் ஆரம்பித்து நம் வாழ்வின் அந்திமம் வரை இசை தொடர்ந்து வருகின்றது. பயிர்களை வளர்ப்பது , பாம்பை ஆடவைப்பது , பசுவை பால் சுரக்க வைப்பது , நோயைக் குணப்படுத்த உதவுவது போல் பல விடயங்களில் இசை அங்கம் வகிக்கின்றது. எமது மூச்சுடன் ஒன்றுபட்டு நிற்கும் இசையின் பண்பு மிக மிக உயர்ந்த தன்மை பொருந்தியது. இதனை நாம் அனுபவித்து மகிழ்வதோடு மட்டுமன்றி கற்றுத் தெளிந்து மற்றவர்க்கும் புகட்டுவது இனிய கடமையாகும். குழந்தைகளின் நல்வளர்ச்சிக்கு இசை நல்லதொரு துணையாகும். மனதிற்கு சாந்தியும் , ஆறுதலும் , உற்சாகமும் இசையை வாத்தியமாகவோ வாய்ப்பாட்டாகவோ அன்றி தாள வாத்தியமாகவோ பயின்று இந்த இசைப்பண்பை பெறுவது இனிதான கடமையாகும்.



சங்கீத வித்துவான், திருமுறைப்பண்ணிசைமணி
திருமதி. மல்லிகா நாகராசா
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல்

– சில யோசனைகள்

புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழிக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும் தமிழ்வழிப் பாடநூல் தொடரின் கட்டமைப்பையும், அப்பாடநூல்களைத் துணையாகக் கொண்டு தமிழ்மொழியைக் கற்பிக்கும் அணுகுமுறைகளையும், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் நேர்கொள்ளும் இடர்களையும், மாணவர்கள் அடையவேண்டிய மொழித்திறன்கள் தொடர்பாகவும் இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

தமிழ்வழிப் பாடநூல் தொடர் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற மொழித்திறன்களை மாணவர்களுக்கு வகுப்பில் கற்பிப்பதற்கு ஏற்றவாறு அவற்றுக்குரிய பாடங்களைக் கொண்டும், அத்திறன்களை மாணவர் படிமுறை வளர்ச்சியாகப் பெறுவதற்கேற்றவாறும் ஒழுங்கமைக்கப்பட்டு, ஒரு முழுமையான மொழிக் கற்பித்தலுக்குரிய பாடநூலாக உருவாக்கப்பட்டுள்ளது. அத்திறன்கள் வகுப்பில் கற்பிக்கப்படவேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மழலையர்நிலை, சிறுவர்நிலை, வளர்நிலை 1, -2, -3, -4 தமிழ்வழிப் பாடநூல்கள் பயன்பாட்டில் உள்ளன.

பிள்ளையினுடைய மொழித்திறன் தேர்ச்சியின் தகுதிநிலையை அறிவதற்கு நாம் இதுவரை எழுத்துத்தேர்வையே நடாத்தி வருகின்றோம். பெற்றோர்கள் மட்டுமல்லாது பெரும்பாலான ஆசிரியர்களும் வாசித்தல் ,எழுதுதல் திறன்களை மட்டுமே மொழித்திறன் கூறுகளாக எண்ணுவதும், தேர்வுக்குப் பிள்ளையைத் தயார்ப்படுத்துவதும் என்ற செயற்பாட்டிலே முழுக்கவனம் கொள்வதுமாக உள்ளார்கள். கேட்டல், பேசுதல் பகுதிகளையும் பிள்ளைக்குக் கற்பிப்பதன் மூலமே பிள்ளை முழுமையான மொழித்திறன் தேர்ச்சியைப் பெறும்.

பிள்ளை, கேட்கின்ற பொருள் பற்றிப் பேசவும் பின்னர் எழுதவும், பார்க்கின்ற காட்சி பற்றிப் பேசவும் பின்னர் எழுதுவதற்குமான வழிகாட்டலும் நெறிப்படுத்தலும் வகுப்பறையில் நிகழவேண்டும். கேட்டல் எனும்போது செவிமடுத்தல் அல்லது செம்மையாகச் செவிமடுத்தல் என்பதையே இங்கு குறிக்கும். கேட்டல், பேசுதல் பகுதிகளைக் கற்பிப்பதற்கு ஏற்றவாறு வகுப்பறைச் சூழலை ஆசிரியர் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

தொடக்க வகுப்புகளில் ஆசிரியர் நேர்கொள்ளும் மாணவர்களின் கல்வியியல் பிரச்சனைகளுள் முக்கியமான சில:

எழுத்துப்பிழைகள்
வாசிப்புப் பிரச்சினை
வாக்கியஅமைப்பு
தன்னாற்றலுடன் எழுதமுடியாமை

### எழுத்துப்பிழைகள்

தமிழ் எழுத்துகள் ஒலிவடிவம், வரிவடிவம் என இரு வடிவங்களைக் கொண்டுள்ளன. எழுத்துக்குரிய ஒலியைக் கேட்கும் போது அதன் வரிவடிவத்தை எழுதத் தெரிந்து கொள்வதற்கும், வரிவடிவத்தைக் காணும் போது அதன் ஒலிவடிவத்தை அடையாளம் கண்டு கொள்வதற்கும் பிள்ளை பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பயிற்சியானது சரியான முன் ஆயத்தங்களுடன் ஆறுதலாக ஐயமற்ற நிலையில் பிள்ளைக்கு நிரந்தரமாகப் பயிற்றப்படல் வேண்டும்.

எழுதப்பழகுதல் என்பது பிள்ளையின் வளர்ச்சியுடன் படிப்படியாக நடைபெறவேண்டிய ஒரு செயலாக இருக்க வேண்டும். எழுத்துகளின் ஒலி, வரி வடிவங்களில் உள்ள சிறிய வேறுபாடுகளை இனங்காணுவது தொடக்கத்தில் பிள்ளைக்குக் கடினமாகவே இருக்கும். தமிழ்நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள் முழுவதையும் கற்பித்து முடித்துவிட்ட நிலையிலும் பெரும்பாலான பிள்ளைகள் எழுத்துப்பிழைகள் விடுவதால் அதைச் சரி செய்யாமல் தொடர்ந்து கற்பிப்பது என்பது ஆசிரியருக்குச் சிரமமாகவே இருக்கும். சொல்வதெழுதுதல் என்பது ஒரு நல்ல பயிற்சியாக இருக்கின்ற போதிலும் ஒவ்வொரு பிள்ளையினதும் குறையைச் சரியாகத் தெரிந்து கொண்டு அதனை நிவர்த்தி செய்ய ஆசிரியர் முயற்சிக்க வேண்டும்.

பொதுவாகப் பிள்ளைகள் விடும் எழுத்துப் பிழைகள் எனப் பார்த்தால்
குறில் நெடில் வேறுபாடு
ர், ற் இடையிலுள்ள மயக்கம்
ட், த் இடையிலுள்ள மயக்கம்
ண், ன், ந் இடையிலுள்ள மயக்கம்
ல், ள், ழ் இடையிலுள்ள மயக்கம்
போன்றவற்றைக் குறிப்பாகக் கூறலாம்.

குறில் நெடில் எழுத்துகளைக் கற்பிக்கும் போது அவற்றுக்குரிய கால அளவுகளுடன் (மாத்திரை) அவை சரியாக உச்சரிக்கப்படவேண்டும். குறில் நெடில் வேறுபாடு, பொருள் வேறுபாட்டுக்குக் காரணமாக இருப்பதால் தொடக்க வகுப்புகளிலேயே அவ்வெழுத்துகளைக் கற்பிப்பதில் உச்சரிப்பு, எழுத்து நிலைகளில் சரியான கவனம் எடுக்கப்படவேண்டும்.

அடுத்து மேலே குறிப்பிடப்பட்ட எழுத்துத் தொகுதிகளைத் தனித்தனியே எடுத்து அவற்றுக்கிடையில் உள்ள வேறுபாடான ஒலிப்பு முறைகளைச் சொல்லிக் கொடுப்பதோடு எழுத்துகளை அவற்றுக்குரிய எழுத்துப் பொறிமுறைகளுடன் எழுதப்பழக்க வேண்டும். பிள்ளை தனது சூழலில் இருந்து அறிந்து கொண்டிருக்கக் கூடிய சொற்கூட்டத்தில் இருந்து சொற்களைத் தெரிந்து, எழுத்துகளைக் கற்பிப்பதற்கு பயன்படுத்தல் நன்று.

### வாசிப்பு

சரியாக வாசிப்பதற்குப் பிள்ளை முதலில் எழுத்துகளின் வரிவடிவங்களுக்குரிய ஒலிவடிவங்களை நன்கு தெரிந்திருக்க வேண்டும். சொற்கள், சிறிய வாக்கியங்கள் எனத் தொடங்கி வாசித்தல் பொறிமுறைகளை (தெளிவான உச்சரிப்பு, விளக்கம், குறியீடுகள், ஒலிபேதங்கள்) அனுசரித்து வாசிப்பதற்கு பயிற்சி அளிக்க வேண்டும். மேற்கூறிய வாசித்தல் பொறிமுறைகளுடன் உரத்து வாசித்தலையே வாசித்தல் என்று நம்மால் கருதப்பட்டாலும் பிள்ளை, தான் வாசிக்கின்ற பகுதியின் பொருள் விளங்க வாசித்தலே உண்மையான வாசித்தலாகும். அதாவது வாசித்த பகுதியை தன்மொழியிலாவது திருப்பிக் கூறக் கூடியதாக இருக்க வேண்டும். ஒரு வாசிப்புக்குப் பின் ஆசிரியர் கேள்விகளைக் கேட்டு பிள்ளையை மீண்டுமொரு முறை வாசிக்கப் பண்ணுவதன் மூலம் விளங்க வாசித்தல் பயிற்சிக்கு உட்படுத்தலாம்.

### வாக்கிய அமைப்பு

தமிழ்மொழி வாக்கிய அமைப்புக்கும் ஐரோப்பிய மொழிகளுடைய வாக்கிய அமைப்புக்கும் வேறுபாடுஉண்டு. வாழ்விட மொழிக்கும் தமிழ் மொழிக்குமான வாக்கிய அமைப்பில் உள்ள ஒருமைப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளை ஒப்பு நோக்கிக் கற்பிப்பதன் மூலம் பிள்ளைக்குத் தமிழ்மொழி வாக்கிய அமைப்பு முறையை இலகுவாகப் பதிய வைக்கலாம்.

குறிப்பாக வாக்கியத்தில் திணை, பால், எண், இடம் என்பவற்றின் எழுவாய் பயனிலை இயைபு என்பது தமிழ் மொழிக்கே உரியதாகும். அவை சிறப்புக் கவனத்துடன் கற்பிக்கப்பட வேண்டும். முதலில் உரையாடல் மூலம் சிறு சிறு வாக்கியங்களாகத் தொடங்கி படிமுறையாக எழுத்து வடிவத்துக்கு கொண்டு வரலாம்.

### தன்னாற்றல்

பிள்ளை ஒரு மொழியில் தன்னாற்றலுடன் எழுதுவதற்கு அதனிடம் போதிய சொல்வளம் இருக்க வேண்டும். பிள்ளைகளோடு உரையாடுவதன் மூலமே அவர்களிடம் சொல்வளத்தை உருவாக்க முடியும். கேட்டல் பேசுதல் பகுதிகளை ஆசிரியர் வகுப்பில் கற்பிப்பதன் மூலம் அதனைச் செய்யலாம்.

மேலே சொல்லப்பட்ட கல்வியியல் பிரச்சனைகள் சுருக்கம் கருதி விரிவாகப் பார்க்கப் படவில்லையாயினும் புதிதாகக் கற்பிக்கத் தொடங்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இக்குறிப்புகள் உதவுமென நம்புகின்றேன்.

புலம் பெயர்ந்து வாழுகின்ற நாட்டில் ஒரு பள்ளியை நடத்துவதன் சிரமத்தை நான் அறிவேன். ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுடன் பதினைந்து ஆண்டு காலத்தை நிறைவு செய்து ஆலமரமாகத் தழைத்து நிற்கும் அன்னை பூபதி கலைக்கூடத்து மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகத்தினரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு**

*திரு. சிவசோதி வரதராஜா*
*செய்திட்ட நிறைவேற்றுனர், தமிழ்வழிப்பாடநூல் தொடர்*

## பதிவுகள்



நோர்வேஜியர்களுக்கான நடனப் பயிற்சி – 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லவிளையாட்டுப் போட்டி

அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடமானது தனது மாணவர்களுக்கு கல்வியைப் போதிப்பதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களை விளையாட்டுத்துறையிலும் ஊக்கிவித்து வருகின்றது. அந்த வகையில் முதன் முறையாக 25.06.1992 ம் ஆண்டு கலைக்கூட மாணவர்களை இரண்டு இல்லங்களாகப் பிரித்து இல்ல விளையாட்டுப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது. தொடர்ந்து குறுகிய காலப் பகுதியில் இல்லங்களை மூன்றாகக் கூட்டி அந்த இல்லங்களுக்கு மஞ்சள், நீலம்,சிவப்பு என பெயரிடப்பட்டு வருடாவருடம் இல்ல விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இந்த போட்டிகளின் காரணமாக மாணவர்கள் பல வாரங்களாக பயிற்சிகளில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருவதும் ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் என அனைத்துப் தரப்பினரும் தாங்கள் சார்ந்த இல்லங்களின் வெற்றிக்காக கடுமையாக உழைப்பதையும் காணமுடிகின்றது.

2000 ம் ஆண்டு அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம் தனது தனி விளையாட்டுப்பிரிவை உருவாக்கி அதற்கு தமிழ்ச் சிறார் ,இளைஞர் விளையாட்டுக் கழகம் ( TAMILSK BARN OG UNGDOM IDRETTS KLUBB ) என பெயரிடப்பட்டது.அடுத்த கட்ட வளர்ச்சியாக சர்வதேச தரத்திலான விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் முதலில் தெரிவுப்போட்டிகள் இடம்பெறும். இறுதிப் போட்டிகளை கள, சுவட்டு போட்டிகளாக பிரித்து போட்டிகள் இரு நாட்கள் இடம் பெற்று வருகின்றது.

2005 ம் ஆண்டு இல்லங்களிற்கு தமிழீழ விடுதலைப் போரில் தமது இனிய உயிரை அர்ப்பணித்த மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டது. அந்த வகையில் மஞ்சள், நீலம், சிவப்பு இல்லங்களுக்கு முறையே சாள்ஸ் அன்ரனி, கௌசல்யன்,அங்கையற்கண்ணி ஆகிய மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டது.

ஆறிலிருந்து பதினாறு வயது வரையிலான சுமார் 600 க்கும் மேற்பட்ட வீரர்-வீராங்கனைகள் இப்போட்டிகளில் கலந்து சிறப்பிப்பார்கள். போட்டிகளின் இறுதி நாள் அன்று பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் கலந்து சிறப்பிப்பதோடு இல்லக் கொட்டகைகள் வர்ணப் பொருட்களால் அழகாக அலங்கரிக்கப்பட்டும் வீரர்-வீராங்கனைகள் வெள்ளைச் சீருடையிலும் ஆசிரியர்கள் தங்களின் இல்ல வர்ண உடையிலும் காணப்படுவார்கள். மாணவர்களின் அணிவகுப்பும் இடம்பெற்று வருகின்றது.

அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூட அனைத்து வளாகங்களும் இணைந்து 2004 ம் ஆண்டு முதல் அன்னைபூபதி வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியை 9,11,13,15,17 ஆகிய வயதுப் பிரிவினருக்கு நடாத்தி வருகின்றது. பல கழகங்கள் மிகவும் ஆர்வத்துடன் இப் போட்டிகளில் பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

*திரு. சதானந்தன் ஆனந்தகரன்*
*விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அணிநடை



தேசியக்கொடியேற்றல்

## இல்ல விளையாட்டுப் போட்டி

## பதிவுகள்



அன்னைபூபதி விருது -2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வள – ஆலோசனை மையம்

## கடந்து வந்த பாதையின் சில பதிவுகள்.... 1992 – 2007

- 01.02.1992 - அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம் அருட்திரு அருளானந்தம் அவர்களால் அங்குரார்ப்பணம்.
- 25.06.1992 - முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : அருட்திரு அருளானந்தம்
- 20.03.1993 - முதலாவது ஆண்டுவிழா
  பிரதம விருந்தினர் : பேராசிரியர் ஆ . வேலுப்பிள்ளை
- 26.06.1993 - இரண்டாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு க . சிவராஜா
- 19.03.1994 - இரண்டாவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : திரு A. C. தாசீசியஸ்
  ஆண்டு விழா மலர் வெளியீடு
- 25.06.1994 - மூன்றாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு வின்சன் . செபஸ்ரியன்
- 10.07.1994 - FØRDE சர்வதேச கலை மாலையில் எம் மாணவர் சிறீலங்கா தேசியக் கொடி கீழ் இறக்கப்பட்டது.
- 01.09.1994 - செஞ்சோலை சிறார் மேம்பாட்டு நிதிக்காக பாடசாலை சிற்றுண்டிச்சாலை ஆரம்பிக்கப்பட்டது.
- 15.10.1994 - ' மழலைப்பூக்கள் ' ' மழலைப்பூங்கா ' ஒலிஇழை வெளியீடு
- 15.01.1995 - ' ஞாயிறு உதவிப் பாடத்திட்ட வகுப்புகள் ' (lekse hjelp) ஆரம்பம்
- 11.03.1995 - மூன்றாவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : அருட்திரு S. J. இம்மானுவேல்
- 24.06.1995 - நான்காவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு GILBERT BJØRN
- 15.01.1996 - ' தமிழ் அமுது ' பாடநூற் தொடர் வெளியிடப்பட்டது
- 17.03.1996 - நான்காவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : திரு ' நிலக்கிளி ' பாலமனோகரன்
- 10.041996 - கலைக்கூட கட்டமைப்பு விஸ்தரிக்கப்பட்டு ' தமிழர் வள ஆலோசனை மையம்' என பதிவு செய்யப்பட்டது
- 16.05.1996 - பெற்றோர் ஆசிரியர்களுக்கான முதல் முழுநாள் உளவியல் கருத்தரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 22.06.1996 - ஐந்தாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு . ஆனந்தகிருஸ்ணன்

- 22.03.1997 - ஐந்தாவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : அருட்திரு யோசப் சந்திரகாந்தன்
  ஆண்டுவிழா சிறப்பு மலர் வெளியீடு

- 21.06.1997 - ஆறாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு . தி . சித்திவிநாயகநாதன்

- 28.03.1998 - ஆறாவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : பேராசிரியர் ந. ஸ்ரீஸ்கந்தராஜா

- 20.06.1998 - ஏழாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு அன்ரன் கபரியல்

- 01.10.1998 - பத்தாம் தரம் கற்று வெளியேறும் மாணவர்க்காக சிறப்பு சான்றிதழ் வழங்கும் திட்டம் ஆரம்பம்

- 27.03.1999 - ஏழாவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : திரு . வீ . சிறிகதிர்காமநாதன்

- 19.06.1999 - எட்டாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு . இ . நாகரட்ணம்

- 31.10.1999 - முழுநாள் உடல், உள மருத்துவக் கருத்தரங்கும், ஆய்வுப்பட்டறையும்

- 22.01.2000 - கலைக்கூட ஒத்துழைப்போடு எம் மாணவர்களின், நோர்வேயில் முதலாவதான
  நடன, மிருதங்க அரங்கேற்றம்

- 01.04.2000 - எட்டாவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : அருட்திரு . பே . இருதயநாதர்
  ' அன்னைபூபதி விருது ' வழங்க ஆரம்பிக்கப்பட்டது

- 15.04.2000 - லண்டன் FINE ARTS ACADAMY இன் கலைப்பாட பரீட்சைகள் இங்கு ஆரம்பம்

- 18.06.2000 - ஒன்பதாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு . ந . அமரசிங்கம்

- 09.09.2000 - கலைக்கூட ஒத்துழைப்போடு எம் மாணவியர் இருவரது நடன அரங்கேற்றம்

- 09.11.2000 - புதிய கட்டட திறப்பு விழா
  திறந்து வைத்தவர் : ஒஸ்லோ நகர பிதா PER DITLEV SIMONSEN
  ' பட்டாம் பூச்சி பாப்பா ' ஒலிவட்டு வெளியீடு
  எம் நிறுவனத்திற்கான இணையப்பக்கம் ஆரம்பம்

- 15-01.2001 - ' தமிழ் இளைஞர் மன்றம் ' எனும் புதிய பிரிவு அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 07-08.04.2001 - ஒன்பதாவது ஆண்டு விழா
  (நோர்வேயில் நடைபெற்ற முதல் இரு நாள் பெரு விழா)
  பிரதம விருந்தினர் : திரு . சு . இராசரத்தினம்
  தமிழ் இளைஞர் மன்றத்தின் ' பாலம் ' சிறுசஞ்சிகை வெளியீடு

- 01.05.2001 - ' மூத்தோர் முற்றம் ' என்னும் புதிய பிரிவு அறிமுகம்

- 16.06.2001 - பத்தாவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : திரு . த. கோணேஸ்வரன்

- 01.09.2001 - கலைக்கூடத்தின் புதிய வளாகம் TØYEN இல் ஆரம்பமானது.
  ஆரம்பித்து வைத்தவர் : குழந்தைகள்,குடும்ப நலத்துறை அமைச்சர்
  KARITA BEKKEMELLEM ORHEIM

- 15.10.2001 - ' கராட்டி தற்காப்பு கலை ' வகுப்புகள் ஆரம்பம்

- 28.10.2001 - அனைத்துலக தமிழ்க் கல்வி பண்பாட்டு அறிவியல் மேம்பாட்டு இணையத்தின்
  ஆசிரியர்களுக்கான முழுநாள் கற்பித்தல் சிறப்புப் பட்டறை

- 01.02.2002 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் LØRENSKOG இல் ஆரம்பமானது
  ஆரம்பித்து வைத்தவர் : நகர முதல்வர் . METTE KORSRUD

- 16.02.2002 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் DRAMMEN இல் ஆரம்பமானது
  ஆரம்பித்து வைத்தவர் : நகரசபை குழுத்தலைவர் . ASLAUG TRONDSEN

- 19.04.2002 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் BERGEN இல் ஆரம்பமானது
  ஆரம்பித்து வைத்தவர் : பாடசாலை அதிபர் . ATLE HANNEVIK

- 22.03.2002 - பத்தாவது ஆண்டு விழா
  23.03.2002 பிரதம விருந்தினர் : திரு . நாகலிங்கம் இராமலிங்கம்
  ' மகுடம் ' ஆண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு
  ' சின்னச் சிட்டுக்கள் ' – ஒலி வட்டு வெளியீடு

- 15.05.2002 - தமிழை தாய் மொழியாக கொண்டிராதவர்களுக்கான தமிழ்ப் பயிற்சி
  வகுப்புகள் ஆரம்பம்

- 22.06.2002 - பதினோராவது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : மருத்துவர் . திரு . டலஸ் டலீமா

- 24.08.2002 - ITEC நிறுவனத்தின் 'தமிழ் வழி' பாடநூற்தொடர் அறிமுகப்படுத்தப்பட்டது.

- 31.08.2002 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் TRONDHEIM இல் ஆரம்பமானது
  ஆரம்பித்து வைத்தவர் : பிரதி நகர முதல்வர் . LIV SANDVAM

- 12.09.2002 - 7 வது 'METROPOLIS' செயற் பெரு அமர்வில் எமக்கான அறிமுகமும்,
  அங்கீகாரமும்

- 15.10.2002 - ' சைவ அமுது ' பாடநூல் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 05.02.2003 - Unni og Jon Dørsjøs minnefond - pris
Gitt av generalsekretær Turid Dankertsen i Norske Kvinners Sanitetsforening

- 16.08.2003 - நூலகம் திறப்பு விழா
திறந்து வைத்தவர் : முன்னைய பிரதமர் JENS STOLTENBERG

- 21.06.2003 - 12 வது இல்ல விளையாட்டுப் போட்டி
பிரதம விருந்தினர் : திரு வல்லிபுரம் சிவராஜா

- 09.10.2003 - FINNLAND இல் எமது அனுசரணையுடன் அங்குள்ள சிறார்களுக்கு ஒரு கல்விக் கூடம் அமைக்கப்பட்டது

- 26.10.2003 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் ULSTEINVIK இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : பிரதி நகர முதல்வர் Hannelore Måseide

- 10.01.2004 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் STAVANGER இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : கலை,கலாச்சார குழுவின் தலைவி Siri Skår

- 24.01.2004 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் FLORØ இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : திரு. செல்லர் நவரட்ணம்

- 23.05.2004 - அன்னைபூபதி கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டிகள் ஆரம்பம்

- 19.06.2004 - 13 வது இல்ல விளையாட்டுப் போட்டி
பிரதம விருந்தினர் : செல்வி பரமேஸ்வரி சின்னதுரை

- 16.10.2004 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் VEITVET இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர்கள் : Dr. சிவபாலன், Dr சுஜந்தன் (தமிழீழம்)

- 23.10.2004 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் FØRDE இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : நகரமுதல்வர்- Nils Gjerland

- 28.11.2004 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் MOLDE இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : Rektor Helge Ramstad
Molde Voksenopplæringssenter

- 26.02.2005 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் ASKER OG BÆRUM இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : பாடசாலை அதிபர் Veera Perminov

- 12.03.2005 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் TØNSBERG இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : திரு. காசிநாதன் நிர்மலநாதன்
இணைப்பாளர், தமிழர் வள ஆலோசனைமையம்

- 20.03.2005 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் ÅLESUND இல் ஆரம்பமானது
ஆரம்பித்து வைத்தவர் : Vigdis Thoresen, leder virksomhet for flyttninger

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 03.04.2005 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் FLEKKEFJØRD இல் ஆரம்பமானது
  ஆரம்பித்து வைத்தவர் : திரு. உதயமூர்த்தி செல்லத்துரை

- 16.06.2005 - Stovner bydel pris
  Gitt av Bydelsutvalgs leder Tore Ludt

- 18.06.2005 - 14 வது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : கலாநிதி. திரு. இளங்கோ பாலசிங்கம்

- 22-23.10.2005 - 13வது ஆண்டுவிழா
  பிரதம விருந்தினர் : திரு.வேலுப்பிள்ளை சிவனடியார்(தமிழர் புணர்வாழ்வுக் கழக வடகிழக்கு-நிர்வாகத் தலைவர்)

- 03.09.2005 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் ØSTFOLD இல் ஆரம்பமானது
  ஆரம்பித்து வைத்தவர் : அருட்திரு அருளானந்தம்

- 26.12.2005 - Tsunami நினைவுப் பலகை திரைநீக்கம்
  திரைநீக்கம் செய்தவர்: திரு.ரெஜி (தமிழர் புனர் வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப்பாளர்)

- 26.04.2006 - Oslo Ambassadørs pris
  Gitt av Skolebyråd TORGER ØDEGAARD

- 01.06.2006 - Kunstner pris 2005 கல்விப்பணிமேலாளர் திரு. சிவதாஸ் சிவபாலசிங்கம்
  Gitt av Oslo ordfører PER DITLEV SIMONSEN

- 17.06.2006 - 15 வது இல்ல விளையாட்டுப் போட்டி
  பிரதம விருந்தினர் : மருத்துவர் . திரு . பேணாட்சோ

- 03.07.2006 - இன்னுமோர் புதிய கட்டிடத்தொகுதி வாங்கப்பட்டது

- 05.08.2006 - கலைக்கூடத்தின் மேலும் ஒரு வளாகம் STORDAL இல் ஆரம்பமானது
  ஆரம்பித்து வைத்தவர் : திரு. காசிநாதன் நிர்மலநாதன்
  இணைப்பாளர், தமிழர் வள ஆலோசனைமையம்

- 14.10.2006 - முதலாவது கலைவிழா – 'சுருதி லய நர்த்தன மாலை'
  பிரதம விருந்தினர் : திரு 'நிலக்கிளி' பாலமனோகரன்

- 31.03.2007 - 01.04.2007 பதினைந்தாவது ஆண்டு விழா
  பிரதம விருந்தினர் : திருமதி. பார்வதி கந்தசாமி
  'விருட்சம்' ஆண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு
  'சைவ அமுது' பாடநூல் வெளியீடு – மேற்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையமாணவர் பதிவு

## வானுயர வாழ்த்துவோம்!

இன்று ஆலமரம் போல் தழைத்தோங்கி விழுதுகள் பரப்பி, வளாகங்கள் பல கண்டு, பெருவிருட்சமாய் வீறுநடைபோடும் எமது கலைக்கூடத்தின் ஜனன ஆண்டாம் 1992ம் ஆண்டு முதல் தமிழ்ப் பாலருந்திப் தமிழ்ப்பசி போக்கி தமிழ்க்கலை கற்றவள் என்ற பெரும் பாக்கியம் பெற்றதையிட்டுப் பெருமையடைகின்றேன். என்னைப் போன்றே இன்று கற்பவர்களும் நாளை கற்க இருப்பவர்களும் தம் தமிழறிவையும், கலைத்திறமைகளையும் வெளிக்கொணர்ந்து நாளைய சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்.

இன்று நான் புலம்பெயர் நாட்டில் வேற்று மொழிக் கலாச்சாரத்தில் வாழ்ந்தும் உயர்கல்வித் தகமையுடன் தொழில் வாய்ப்பைப் பெற்ற நிலையில் இருக்கின்றேன் என்றால் அதற்கான அத்திவாரமாய் இருந்தது எமது அன்னை பூபதித்தமிழ்க் கலைக்கூடமே என்றுரைத்தால் அது மிகையாகாது! இக் கலைக்கூடத்தின் ஆரம்ப நாட்கள் இன்னும் என் மனக்கண்களில் நிழலாடுகின்றன. இதன் பிதா மகர்களாம் திரு சிவதாஸ் மாஸ்ரர், திரு நிர்மலநாதன் மாஸ்ரர் மற்றும் அனைத்து ஆசிரியர்கள் நிர்வாகிகள் அனைவரினதும் தன்னலமற்ற தமிழ்த்தாய் சேவை அன்று போல் இன்றும் என்றும் தொடர்ந்திடும். இது என் ஆணித்தரமான ஆவலான நம்பிக்கை! ஓன்றரை தசாப்தங்கள் கச்சிதமாய் கடந்தன. இன்னும் பல தசாப்தங்கள் ஒளிமயமாய்க் கடந்திட இறைவன் அருள் மழை பொழிய வேண்டி வாழ்த்துகின்றேன்.

எமது தமிழ்க் கலைக்கூடம் இனிய தமிழை இயம்பியபடி பதினைந்து வருடங்களைப் பூர்த்தி செய்து பூத்துக் குலுங்கும் புனித நாளில், எனது மனக்கிடைக்கைகளை வெளிக்கொணர சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் நன்றிகள்!

இறுதியாக, நாம் இங்கு புலம் பெயர்ந்தவர்களாக இருந்தும் புனிதமான நம் தமிழ் மொழியைப் பொலிவுடன் படிக்கின்றோம். நம் தமிழ்க் கலைகளைக் கடினமின்றிக் கற்கின்றோம். ஆனால்.. அங்கு நம் தமிழ் மண்ணில் ஆற்றலிருந்தும் ஆசையிருந்தும் நாட்டு நிலைமையால் நாதியுற்று, தரப்படுத்தலால் தளர்வுற்று, பாதுகாப்புக் கெடுபிடிகளால் பாதிப்புற்று மரத்தடியிலும் மணற்தரையிலும் துயர் நிலையில் கல்வி கற்கிறார்களே நம் தொப்பிள் கொடி உறவுகள், அவர்களது கல்விக்கான நம் தார்மீகக் கடமையைக் கருத்தில் கொண்டு... "கனக்கவல்ல.. கடுகளவாவது" நாம் யாவரும் உதவ வேண்டும். என்று பணிவன்புடன் வேண்டி விடை பெறுகின்றேன்.

*திருமதி. திருமகள் சுபேந்திரராஜா*

# பழையமாணவர் பதிவு

15 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன!

அன்னைபூபதி கலைக்கூடத்தின் ஆரம்ப நாட்களில் சில மாணவ மாணவிகள் மட்டும் பயின்றோம். இன்றைய அதன் வளர்ச்சி ஆலமரம் போல் வியாபித்து நிற்கிறது!

தமிழ் மொழியையும் பல்கலைகளையும் பயிலும் மாணவர்கள் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுடன் சகோதரப் பாடசாலைகள் பல உருவாகிப் பெரும் பலமாகி நிற்பதை நினைக்கையில் நெஞ்சம் இனிக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதிலிகளாக விரட்டப்பட்ட ஈழத்துப் பறவைகள் இங்கு வந்து கூடு அமைத்து தாம் வளர்த்தெடுக்கும் குஞ்சுகளை தமிழ்க் கலை கலாச்சாரத்தோடும், அமிழ்தினும் இனிய தமிழ் மொழியோடும் வளர்த்தெடுக்க தொண்டாற்றும் இப் பாடசாலையின் சேவை மலையைவிட உயர்வானதும், காலத்தின் அவசியமானதுமாகும்.

"மெல்லத் தமிழ் இனிச்சாகும் மேற்குக்கலைகள் புவியினில் ஓங்கும்" எனக்கூறிய பாரதியின் எச்சரிக்கையையும், மனப்பயத்தையும் விரட்டியடிக்கும் பாடசாலையாக நோர்வே மண்ணில் தலைநிமிரந்து நிற்கிறது அன்னை பூபதி கலைக்கூடம்!

கண்ணுறக் கடமையாற்றும் ஆசிரியர்களும், இப்பாடசாலைக்கு இதுவரை அமைந்த அதிபர்களும் முதன்மை இடத்தில் வைத்து நினைவு கூரத்தக்கவர்கள். இப்பாடசாலை மேலும் வளர்ந்து இனிய தமிழ்த்தொண்டாற்ற வேண்டும் என்பதே எனது வேண்டுதலும் ஆசையுமாகும்.

*திருமதி. துஷ்யா அகிலேந்திரன்*

*(இயக்குனர்)*
*நாட்டிய சமர்ப்பணா*

# தமிழ்ப் பண்பாடும் சைவசமயமும்

சைவசித்தாந்தக் கொள்கை நெறியினைச் "சித்தாந்த சைவம்" எனப் பெரியோர்கள் போற்றுவர். இது உலகளாவிய பரந்த கருத்துக்களைக் கொண்டிருந்த போதிலும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்குமேயுரிய பழைமையும், பெருமையும் மிக்க சிறப்பு நெறியாக விளங்குகின்றது.

சிவனை வழிபடுபவர்கள் யார்? அல்லது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் யாது? என்ற கேள்வி எழும்போது சைவர்கள், சைவசமயம் என்று விடை பகரலாம். தத்துவ அடிப்படையில் சைவசமயமானது தனக்குள் பலவகைப் பிரிவுகளைக் கொண்டு உலகெங்கும் பரந்து காணப்படுகின்றது. இந்தியாவின் வடக்கிலே வாழும் காஷ்மீர சைவம், கன்னடத்தில் வழங்கும் வீரசைவம், தமிழகம், தமிழ் ஈழத்திலே திகழும் சைவ சித்தாந்த சைவம் என்பன முக்கியமான இவற்றுள் சிலவாகும்.

வசுகுப்தர், கல்லடர், சோமனந்தர், அபிநவகுப்தர் முதலிய சான்றோர்களால் காஷ்மீர நாட்டிலே பரப்பப்பெற்றது காஷ்மீரசைவம். பசவேசுவரர், சித்தராமையர், அல்லமாப்பிரபு முதலிய அருளாளர்களால் வளர்க்கப் பெற்றது கன்னட வீரசைவம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என அழைக்கப்படும் சமயாச்சாரியர்கள் நால்வராலும், மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நான்கு சந்தானசாரியர்களாலும் வளர்க்கப் பெற்றதே சைவசித்தாந்தம் என்னும் செந்நெறியாகும். தமிழர்களால் போற்றப்படும் சைவத்தின் சித்தாந்தம் அல்லது கொள்கையே சைவசித்தாந்தம் எனப் போற்றப்படுகின்றது. இந்த மெய்ப்பொருட் கொள்கையே சைவத்தின் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு திருமுறைகளையும் இயற்றிய 27 சைவ நாயன்மார்களே தமிழை வளர்ப்பதிலும் பெரும்பங்கு வகித்தவர்கள் ஆவார்கள். இவர்களின் தமிழ்ப்பண்பாடு மிக்க வாழ்கை நெறிகளே சைவ சித்தாந்தத்தின் உயர் கொள்கைகளாகின. சந்தானசாரியர்கள் அருளிய பதின்நான்கு சைவசித்தாந்த சாத்திரங்களும் சைவப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் கருவூலமாக விளங்குகின்றன. பண்பாடு என்பது சமுதாயத்தின் உயிர் நாடியாகும். சிறந்தகொள்கைகள், உயர்ந்த எண்ணங்கள், பரந்த நோக்கங்கள், கட்டுப்பாடான உறவு, பணிவு ஆகியன பண்பாடாகப் போற்றப்படுகின்றன. தனிமனிதனின் உள்ள மேம்பாடே உயர் பண்பாடாகும் எனும் சைவசித்தாந்தம் காட்டும் பண்பாடே தரணி போற்றும் தமிழ்ப் பண்பாடுமாகும் எனில் மிகையில்லை.

தமிழ் மக்களில் பெரும்பாலானவரின் வாழ்க்கை சமயச் சார்புடையதாகவே இருப்பதால், பண்பாடும் சமயம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. சைவசித்தாந்தப் பெரும் சான்றோராகிய அருள்நந்தி தேவரும், மக்களுக்கு இருக்க வேண்டிய பதினாறு இயல்புகளை ஒவ்வொருவரும் இயல்பாக உடையவராதல் வேண்டும், இவையே தமிழ்ப்பாண்பாடு ஆகும் என்பார்.யாவரிடத்தும் அன்பாகப் பழகுதல், எளியோரிடத்தும், சிற்றுயிர்களிடத்தும் இரக்கங்கொள்ளல், இயற்கையை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதல், யாவரிடத்தும் இன்முகம் காட்டல், எல்லோரையும் அன்பினால் கவர்ந்து இனிய தொடர்பினை ஏற்படுத்தல், ஐம்பொறிகளையும் அடக்கல், நல்லன கடைப்பிடித்தல், உதவி அற்றவர்களுக்கு இயன்றன கொடுத்து உதவிபுரிதல், அறிவு, அகவை, அநுபவம் உள்ளோரைப் பணிதல், யாவரோடும் செருக்கின்றிப் பழகுதல், பிறன்மனை விழையாமை, பிறர்பொருள் மீது அவாக்கொள்ளாமை, உண்மையைக் கடைப்பிடித்தல், அறநெறி போற்றி வாழ்தல், நல்வவை தீயவை எவையெவை எனப் பகுத்துணர்ந்து வாழ்தல், சான்றோரையும் சான்றோர் கொள்கைளையும் போற்றுதல் என்பனவும், இன்ன பிறவும் தமிழ்ப் பண்பாடுகளாகும்.

முருகன் சிவனுக்கு உபதேசித்த பிரணவ மந்திரத்தின் கருத்துக்களைச் சற்றுக் கவனிப்போம். "ஓம்" எனக் கூறுமிடத்து முதலில் இதழ் குவிகின்றது. ஓம் எனும் சொல்லைப் பிரிக்குமிடத்து "உ + அ + ம்" என வரும். ஆனால் வடமொழியினர் ஓம் எனும் மந்திரத்தை ஔம் என்றே உச்சரிப்பர். இது "அ + உ + ம்" என்றே வரும். பிரணவத்தின் பொருள் திருமூலர் வாய்மொழிப்படி

"அகாரம் உயிரே உகாரம் பரமே
மகார மலமாய் வருமுப் பதம்"

என இருப்பதனால் ஓம் என்பது தமிழ் மந்திரமே ஆகும். அருணகிரிநாதர் "ஓம் பெறும் ப்ரணவாதி என்றும்" இதனை முதுமறை என்றும், கொஞ்சித்தமிழ் என்றும் கூறுவார். 10 ஆம் திருமுறையான திருமூலரின் "திருமந்திரம்" தமிழர்களின்பழம்பெரும்தத்துவநூலாகும். மந்திரம்என்பதுநினைப்பவரைக்காப்பாற்றுவதுஎனப் பொருள்படும். தமிழர்களாகிய நாம் வடமொழி தவிர்த்து எமது சமயாசாரியர்களாலும், சந்தானாசாரியர்களாலும் வளர்க்கப்பட்ட தமிழில் ஆண்டவனைப் பாடித் துதித்துத் தமிழையும், தமிழ்ப் பண்பாட்டினையும் சைவத்துடன் சேர்த்தே வளர்ப்போமாக.

**வாழ்கதமிழ்**

**சிரித்திருப்போம் இன்பமாக வாழ்வோம்.**

திரு. அஜேய் விமலநாதன்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியாண்டு 2006–2007ல் கடமையாற்றும் ஆசிரியர்களும் உதவியாசிரியர்களும்...

| | |
|---|---|
| சிவதாஸ் | சிவபாலசிங்கம் |
| கௌசலாதேவி | லங்கேஸ்வரன் |
| வேதலிங்கம் | சம்பந்தர் |
| சோமாஸ்கந்தர் | செல்லத்துரை |
| தர்ஷினி | இளஞ்செழியன் |
| குணதாசன் | இராமசாமி |
| கீதாஞ்சலி | சிவதாசன் |
| குணமணி | பரமு |
| அருள்நிதி | இராதாகிருஷ்ணன் |
| உமைபாலன் | தியாகராஜா |
| தெய்வானந்தி | சுப்பிரமணியம் |
| சுகந்தினி | நந்தகோபன் |
| புஸ்பராணி | இளையராஜா |
| வனஜா | உதயகுமார் |
| சுகிர்தா | ரகுநாதன் |
| சந்திரவதனி | முருகானந்தன் |
| வரதராஜன் | பொன்னையா |
| யோகேஸ்வரி | அருணகிரிநாதன் |
| ஜெயந்தி | சுதாகரன் |
| விமலன் | சண்முகநாதன் |
| சிறீபாலன் | கனகரட்ணம் |
| இந்துமதி | ஜெயபாலச்சந்திரன் |
| ஜசிந்தா | சிவனேந்திரன் |
| சர்வோதயன் | சத்தியானந்தன் |
| வனிதா | சிவகுமார் |
| மேரிபுளோரிடா | யூமன் பிரான்சிஸ் |
| கலைவாணி | நகுலேஸ்வரன் |
| வசந்தகுமாரி | துரைராசா |
| குமுதினி | சிவகுமார் |
| கலைச்செல்வி | நிர்மலநாதன் |

| | |
|---|---|
| நளாயினி | குமாரலிங்கம் |
| சுகந்தினி | இராஜேஸ்வரன் |
| யோகாதேவி | குணதாசன் |
| விக்னேஸ்வரி | குணரட்ணம் |
| மதனா | கணேசரட்ணம் |
| சாந்தி | சிவகுணதாசன் |
| அம்பிகாதேவி | வசந்தன் |
| சறோஜினி | மூர்த்தி |
| மேரிறஞ்சினி | குணதாஸ் |
| ஞானசீலி | மேவின் |
| கமலாம்பிகை | விக்கினேஸ்வரன் |
| புஸ்பலதா | தவபாலன் |
| சுலோஜனா | அருள்வாசகம் |
| சியாதினி | உதயசிங்கம் |
| ரஜிதா | விஜயபாலா |
| மதனா | கோவிந்தராஜ் |
| ஜனனி | குணதாஸ் |
| மேரி றெஜினா | ஜெயானந்தன் |
| சிவாஜினி | சிவகுகன் |
| ஷகிலா | ரமேஷ் |
| பாலநாயகி | பாலசுப்ரமணியம் |
| மல்லிகா | நாகராசா |
| கங்கா | ஜெயராஜ் |
| சுந்தரமூர்த்தி | கணேசன் |
| ஜெயராஜன் | ராஜநாதன் |
| பாமினி | ஜெயராஜன் |
| வாசுகி | ரங்கன் |
| அஜய் | விமலநாதன் |
| கலைமதி | திருக்கேதீஸ்வரன் |
| கலைக்கவிதா | ஆனந்தகுமார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கோணேசராஜா | பொன்னுத்துரை |
| ஜெயானந்தன் | றொபேட் |
| ஸ்ரீநேசன் | சுப்பிரமணியம் |
| நாகதாசன் | நவரட்ணம் |
| நிர்மலாதேவி | கலைராஜன் |
| ஜெயராணி | சிவரூபன் |
| சுஜாதா | கமலநாதன் |
| ரதினி | விக்னேஸ்வரன் |

| | |
|---|---|
| சுகீலசாந்தி | குணரட்ணம் |
| கௌசலா | உமாகுருபரன் |
| காயத்திரி | வாமதேவன் |
| பாலசுப்பிரமணியம் | பெரியதம்பி |
| நாகேஸ்வரி | பாலசுப்பிரமணியம் |
| சியாமளா | தெய்வர் |
| பிறின்சன் | சத்தியசீலன் |
| சிவகணேஷ் | வடிவேலு |

## ஞாயிறு உதவிப் பாடத்திட்ட ஆசிரியர்கள்

| |
|---|
| கிறகரி குயின்ரன் |
| றெஜினோல்ட் யுவக்கீம் |
| றஜனி குகதாசன் |
| தீபா ஜெயரட்டிணம் |
| ஆபிரகாம் விஜயராஜா |
| துசாந்தி பெர்னான்டோ |
| நவரட்னராஜா நடராஜா |
| பகீதரன் சிவலிங்கம் |
| சதானந்தன் மூத்ததம்பி |
| ரவீந்திரன் தம்பிப்பிள்ளை |
| நகுலன் முத்தையா |
| ஜெபா சிதம்பரநாதன் |
| ரூபன் சிவராஜா |
| Stein Michael Storleir |
| அகிலன் செபஸ்ரியன் |

| |
|---|
| நிர்மலன் செல்வராஜா |
| பிரசன்னா குகதாசன் |
| விமல் விஜயராஜ் |
| தனகரன் ராஜநாயகம் |
| றூபன் அன்ரனி |
| டிசங்கர் ராஜகுலசிங்கம் |
| தயா நாகலிங்கம் |
| கிறிஸ்ரோ மேவின் |
| வித்தியா சிறிசேகராசா |
| சுபாஷினி பரமேஸ்வரன் |
| டிசானி அமித் |
| லாவண்யா திருச்செல்வம் |
| ஐஸ்வர்யா குலேந்திரன் |
| சங்கீதா சிவஞானசுந்தரம் |
| துஸ்யந்தி கணேச்சந்திரா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய சமூகம் பல்துறைகளில் தடம் பதித்தலுக்கான ஊக்குவிப்புத் தளமாக....

புதிய சமூகச் சிந்தனையுடைய, இன அடையாளத்தைப் பேணுகின்ற இளைய சமுதாயத்தை உருவாக்க வேண்டியது இன்றைய காலக் கடமையுயாகும். எமது இளைய சமுதாயத்தினரை வழிநடத்தும் பணியென்று நோக்குமிடத்து, பெற்றோர்கள், வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயமும், அத்துடன் சமூகப் பொறுப்புணர்வு மிக்க அனைத்து மூத்தோர்களினதும் பங்கு மிக முதன்மையானதாக இருத்தல் அவசியமாகும். இவர்கள் தமது அனுபவங்களையும் தொடர்புகளையும் ஆற்றல்களையும் இளையோருடன் பகிர்வதன் மூலமே அவர்களை வளச்சிப்பாதையில் இட்டுச்சென்று மேன்மை அடையச் செய்ய முடியும்.

### பல்துறைசார் கல்வியாளர்களை உருவாக்குதல்

இவ்வாறான சமூகத் தேவைகளின் அடிப்படையில், தமிழர் வள ஆலோசனை மையத்தின் செயற்பாடுகளின் ஒன்றான உதவிப்பாடத்திட்டமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. கல்வி, வழிநடத்தல், ஒழுக்கம் மற்றும் ஊக்குவித்தல் மூலமாகவும் மாணவர்களின் திறமைகளுக்கு ஏற்ற உயர்கல்வித் தெரிவுகளுக்கான மதியுரைகளும் வழங்கப்படுகின்றன. தமிழ் மாணவர்கள் சிறந்த கல்வியாளர்களாகவும் துறைசார்ந்த வல்லுனர்களாகவும் பண்புமிக்க சமூகப் பிரஜைகளாகவும் உருவாகவேண்டுமென்பதே எமது குறிக்கோளாக உள்ளது. அதற்கான அடித்தளம் இச்செயற்திட்டத்தின் மூலம் இடப்படுகின்றது.

### ஏனைய வெளிநாட்டுப் பின்னணியுடைய மாணவர்கள்

இன்று 150 மேற்பட்ட மாணவர்கள் உதவிப்பாடத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றார்கள். தமிழ் மாணவர்களுடன், இங்குள்ள வேறு வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்ட மாணவர்களும் பயன்பெற்று வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வகுப்புகள்

5 முதல் 7ம் வகுப்பு வரையான மாணவர்களுக்கான உதவிப்பாடத் திட்டம் செவ்வாய்க் கிழமைகளிலும், 8,9,10 மற்றும் grunnkurs, VK1, VK2 ஆகிய வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறுகின்றன.

### நோர்வேஜிய மட்டத்தில் அங்கீகாரம்

தமிழர் வள ஆலோசனை மையத்தின் செயற்பாடுகளுக்கான அங்கீகாரமாக 2006ம் ஆண்டு ஒஸ்லோ நகர சபையின் "இணைவாக்கத்திற்கும் ஒருமைப்பாட்டுக்குமான அலகினால்" **OXLO ambassadør** விருது வழங்கப்பட்டமையானது, எமது செயற்பாடுகளின் இன்றியமையாமையை தெளிவுபடுத்துகின்றது என்பதைக் குறிப்பிடுவதுடன், இத்தருணத்தில் நாம் எமது ஆசிரியர்களுக்கும், நிர்வாக உறுப்பினர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

### இளைய தலைமுறை ஆசிரியர்களின் பங்கு

இங்கு பல்கலைகழகங்களில் உயர்கல்வி கற்று வரும் பல துறைசார்ந்த மாணவர்களும், பட்டப்படிப்பினை நிறைவுசெய்து தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ள இளைய, மூத்த பட்டதாரிகளும் இணைந்து கற்பித்தல் பணிகளில் கடைமை ஆற்றி வருகின்றார்கள். இவர்களில் பலர் உதவிப்பாடத்திட்டத்தில் மாணவர்களாகப் பயன்பெற்றவர்கள். இளைய தலைமுறை ஆசிரியர்களின் வரவு மிகவும் பயனுடையதாக அமைந்துள்ளது. அவர்களின் புதிய சிந்தனை அணுகுமுறைகளும், இரு கலாச்சார சூழலில் பெற்ற அவர்களின் அனுபவங்களும் எமது செயற்பாடுகளுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

இளைய தலைமுறையினர் இப்பேர்ப்பட்ட சமூகச் செயற்பாடுகளில் ஆர்வங் காட்டி வருகின்றமை பாராட்டுதலுக்குரியது. இது ஒரு உறுதியான எதிர்காலத் தமிழ்ச் சமூகத்தின் அத்திவாரமாக விளங்குகின்றது. அவை எமக்கு பெருமையையும், உற்சாகத்தையும் தருகின்றது என்பதினை அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*றெ. யுவக்கிம்*
*பொறுப்பாளர், உதவிப் பாடத்திட்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையமாணவர் பதிவு

தமிழர்வள ஆலோசனை மையத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் நன்மை கருதிய உதவிப்பாடத்திட்டம் விளங்குகின்றது. நான் எனது 16 வது வயதில் இங்கு இணைந்து கொண்டேன். மேல்நிலைக் கல்விக்கூடத்தில் படிக்கும் போது வீட்டுப்பாடங்கள் நிறையவே இருந்தன. ஓய்வுநேரங்களில் விளையாட்டுக்களிலும் ஈடுபடும் எனக்கு வீட்டுப்பாடங்களில் உதவி தேவைப்பட்டது. இத்தேவையை இந் நிறுவனத்தின் மூலம் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. இது மாத்திரமின்றி என்போன்ற இளைஞர்களுடன் அறிமுகமாகிச் சேர்ந்து பழகும் வாயப்பும் கிட்டியது.

இச்சந்தர்ப்பத்தில் இங்கே வாழும் இளையோரின் நலன்களுக்கான ஒரு இளையோர் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சிறு கழகத்திற்குத் தலைமை தாங்கும் வாய்ப்பையும் நான் ஏற்றுக் கொண்டேன். இது எனக்கு மிகவும் ஆவலை ஊக்குவிக்கும் விடயம் மட்டுமல்லாமல் சவாலாகவும் வேலை செய்ய உத்வேகமளித்தது. இந்த அமைப்பினூடாக "பாலம்" என்ற அரையாண்டுச் சஞ்சிகையையும் வெளியிட்டோம்.


தமிழர்வள ஆலோசனை மையம், நிறைந்த வாய்ப்புக்களுக்கு வழி வகுக்கும் ஒரு நிறுவனம். இங்கே கிடைக்கும் குறைவற்ற வளங்களை எவ்வாறு தகுந்த முறையில் பயன் படுத்துவது என்பது தான் எமது தனிப்பட்ட திறமையிலும் தங்கியுள்ளது. எனது பள்ளிப்பாடங்களின் பெருஞ்சுமையை இந்நிறுவனம் மூலம் இலகுவாக்க முடிந்தது. மாணவர்களினது முயற்சிக்கு ஏற்ப பாடநெறிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கான வழியேற்படுத்துவதோடு, எமக்கென ஒரு தனித்துவத்தையும் நல்வழிப்படுத்தலையும் தன் நோக்கமாக கொண்டு இயங்கி வருகிறது இக்கூடம்.

இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கலாச்சார முரண்பாடுகளைத் தவிர்க்கும் முகமாக காணப்படுகின்றது. இன்று நான் ஒரு காவல்துறைக் கல்லூரி மாணவனாகியதற்கு நான் இங்கு பெற்ற அறிவும் அனுபவமும் ஒருவகையில் தூண்டுதலாக அமைந்தது என்பேன். இத்துறையில் மிகவும் சொற்ப அளவிலேயே சிறுபான்மை இனத்தவர்கள் கற்கிறார்கள். எனது விருப்பமும் எதிர்கால சந்ததியினரை நல்வழிப் படுத்துவதே! எனவே தற்பொழுது நானும் இப்பாரிய நிறுவனத்தில் ஞாயிறு உதவிப்பாடத்திட்டத்தில் துணை ஆசிரியராக பணியாற்றி வருகின்றேன். தெரிவுகள் நிறைந்த கல்விச் சூழலில் இது ஏனைய மாணவர்களுக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமையும்.

*-றூபன் அந்தோனி.*
*காவல்துறை கல்லூரி மாணவன்.*

(தமிழாக்கம்: கலைச்செல்வி நிர்மலநாதன்)

5-7 வகுப்பு
உதவிப் பாடத்திட்ட மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரொம்மன் வளாக ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்வாகப் பொறுப்பாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Annai Poopathi Tamil Cultural Centre
Nedre Rommen 3
0988 Oslo, Norway

Cover & Book Design by : R:Gunathasan

Telephone : 22218191
Fax : 22218190
e-mail : annai@annai.no
web : http://www.annai.no

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org